9581

WELLAWATTA MAYURA PLACE

# வெள்ளவத்தை மயூரு பிளேஸ்

SRI PATHTHIRAKALI AMMAN TEMPLE

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில்

KUMBABISHEKA SOUVENIR

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 25-11-1987



255.12
பத்தி
SL/PR

WITH COMPLIMENTS

FROM



LALITHA
JEWELLERS (PRIVATE) LTD.,

60, SEA STREET,

COLOMBO - 11.

TEL: 22300 - 546886

உ

ஸ்ரீ விநாயகர் துணை

வெள்ளவத்தை, மயூரா பிளேஸ்

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயப் பரிபாலன சபை

255.12
பத்தி
SL/PR



மகா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

**25-11-1987**

(பிரபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 9ம் நாள் புதன்கிழமை)

*with the best*

*compliments*

*from*

ANURA DIESEL HOUSE

97, K. CYRIL C. PERERA MAWATHA,

COLOMBO-15.

# மயூரா பதியமர் மாதேவி

வெள்ளரசும் வேம்புமிலை வித்தரியாய்ச் சூலமதில்
தெள்ளுதமிழ் மாந்தருக்குக் காளியாகி — உள்ளமிலாத்
தாயன்பால் எந்தநாளும் தான்சனிந்து காக்க வந்தாள்
மயூரா பதியமர்மா தேவி

யாது மாகி நின்றாய் — காளி
யாவு மாகி நின்றாய்
தீது யாவும் நீங்க மயூரா
பதி எழுந்து வந்தாய்.

— ஆசிரியர்

# சமர்ப்பணம்

கடலில் மிதக்கும் கனகத் திருநாடாம் இலங்கையின் கோநகர் கொழும்பு - வெள்ளவத்தை - மயூரா இடந்தனில் - வெள்ளரசும் வேம்பும் விளங்கிய பதிதனில் - எழில் வளம் கொஞ்சும் . கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் -

அன்னை ஸ்ரீ பத்திரகாளியின் ஆலயத்தின் தெய்விகத் திருப்பணிகள் பூர்த்திபெறவும், – மஹா கும்பாபிஷேகம் பொன்னனைய காலமதில் புகன்றபடி நிறைவேறவும் - இந்நலம் புகழ மலருகின்ற சிறப்புமலர் – மலர்வதற்கும் – காரண காரியமாக இருந்தவள்


மங்கல நாயகியாம்

அவளே ஆதலின் அவளருளால் மலர்ந்த அற்புத மலரை அவ ளின் பாதார விந்தங்களிலே சமர்ப்பித்துப் பூஜிக்கின்றோம்.



Compliments

from



LUCKY PLAZA EMPORIUM

SECOND CROSS STREET,

COLOMBO-11.

# தேன் மலர் சுவைப்பீர்

அன்னை பத்திரகாளியரின் அழகுமிளிர் ஆலயத்தின் வண்ணமுறு குடமுழுக்கு விழாக் காணும் வேளைதன்னில் நன்னயமாய் மலருகின்ற சிறப்பு மலர் இதழ்களிலே, கன்னல், தேன், கற்கண்டு, சர்க்கரை, போல் அமுதங்கள், இந்துமதப் பேரறிஞர் இதயநல் ஆசிகளும், சந்த தமிழ் அரசியலில் பெரியவர்கள் நல்லுரையும் கோயில் நலம் காக்கும் சபை உறுப்பினர்கள் கருத்துரையும் வாயில்ப் போல் வந்தவைகள் வரிசையிலே அமைந்தவையும், அன்னையவள் வரலாறும், ஆசிரியர் மன விளக்கும் அருளமுதப் பாடல்களும் மனமகலா பஜன்களுமாய் மாறாத பக்தியுடன் அடியவர்கள் சிந்தனையும் பேரறிஞர் தத்துவமும் பெருமை மிகு முத்துகளும் ஆராத அமுதமென அழகான தேன்மலரில் சீரான இதழ்களிலே தித்திக்கத் தான் படைத்தோம்.

கற்றவரும், மற்றவரும் கலைத்துறையில் உற்றவரும் உற்ற சில பிழையேதும் உங்களுக்கு தெரிந்தாலும் பெற்ற பிள்ளை செய்த பிழை பொறுக்குந் தாய்போல இந்த நற்றமிழின் தேன் மலர் நயம்படச் சுவைத்திடுவீர் நாயகி ஸ்ரீ பத்திரகாளியருள் பெற்றிடுவீர்.

மலர்க் குழு

*Best Wishes*

*from*

# SHUMS TRADE CENTRE

136 KEYZER STREET,
"SHUMS BUILDING"
COLOMBO - 11

## CITIZEN & SEIKO

WATCHES & CLOCKS
WITH
INTERNATIONAL GUARANTEE

*Also*

- *RADO*
- *VEGA*
- *ALBA*
- *MONDIA*

*All other Brands of Watches, Clocks, Alarm Clocks, Radios, Radio Casettes, Cameras, Kitchen Appliances & Gift items Etc. Etc.*

Agents :- NATIONAL & TELESONIC.

# ஆசியுரைகள்

தன்னை ஈன்ற

தாய்க்குலத்தின் தலைவி

முன்னைப் பழமைக்கும்

மூத்த முதல்வி

அன்னை ஸ்ரீ பத்ரகாளிக்கு

அன்புடன் நெஞ்சங்கள்

தரும்

# ஆசியுரைகளை

அவள் திருவடிகளுக்கு

சிலம்பாக்கிச்

சமர்ப்பிக்கின்றோம்.



### ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஆசியுரை

யாத்ராஸ்தானம் :

பத்ரம் என்றால் நன்மை என்று பொருள். ஆகவே, பத்திரகாளி என்றால் நன்மை பயக்கும் காளி என்று பொருள் படும். தன் ரத்தத்தின் ஒவ்வொரு சொட்டிலிருந்தும் போர்க்களத்திலேயே தன்னையொத்த ஒரு அரக்கன் கிளர்ந்து எழ வேண்டும் என்ற விசித்திரமான வரம் பெற்றிருந்தவன் ரக்தபீஜன் என்ற அஸுரன்.

அரக்கர் குலமறுக்க முனைந்த அன்னை துர்கைக்கு இவனது குருதி குடித்து இவன் பெற்றிருந்த வரத்தைப் பயனற்றுப் போகச்செய்வதற்கென்றே அன்னை பராசக்தி கொண்ட கோலமே காளியின் கோலமாகும்.

நிறத்தில் தமோகுணத்தினளாய் செயலில் அதனுடன் இணைந்த ரஜோகுணத்தினளாய் விளங்கிடினும் ஸத்வநிலையில் அன்னை பத்திரகாளியாகி நன்மையளிப்பதில் நிகரற்றவளாய் விளங்குகிறாள்.

இவ்வன்னை தானே தேர்ந்தெடுத்துக் குடிகொண்டுள்ள கொழும்பு மயூர பிளேஸில் இவ்வன்னைக்கு நூதன ஆலயம் நிர்மாணித்து மஹா கும்பாபிஷேகமும் – மலர் வெளியீடும் நிகழ விருப்பதையறிந்து மகிழ்கிறோம்.

கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறவும் மலர் அன்னையின் பெருமைத்தேன் ததும்புவதாக அமையவும் பராசக்தியாம் பத்திரகாளியின் அருள் பெருகிடுமாக.

நாராயணஸ்ம்ருதி

Best Compliments

from

SILK PARADISE

36, GALLE ROAD,

COLOMBO-4.

உ

## கொழும்பு மாநகர் வெள்ளவத்தை மயூரபதி

## ஸ்ரீ மகா காளி அம்பாள் திருக்கோயில்

## மகா கும்பாபிஷேக புனித விழா அருள் மலர்

# ஆசியுரை



சகல புவனங்களையும் தன்னகத்தே கொண்ட தன்மையை உணர்த்தவே அகில புவன மாதா புவனேஸ்வரி அகிலாண்டேஸ்வரி என்னும் திருநாமம் பொருந்திய நிலையில் நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் சைவம் வளர, தமிழ் வளர உலகம் உய்ய வேண்டும் என்னும் நற்கருத்துக்களைக் கொண்டே நமது முன்னோர்கள் சுயம்புஸ்தலம் இருஷி பிரதிஷ்டையானஸ்தலம். மானுடப்பிரதிஷ்டையாக அமைந்த பல ஸ்தலங்கள் உண்டு. ஆகவே, கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழி வாக்கு உண்டு.

இதை நிரூபிக்கவே நம் இந்துக்கள் சென்ற இடங்களில் இடவசதி, பொருள் வசதிக்கு ஏற்ப தெய்வீக அனுக்கிரகத்தைக் கொண்டு ஆலயங்களை சிற்ப சாஸ்திர ரீதியில் அமைத்து வேத சிவ ஆகமங்களுக்கு அமைய திருவுருவங்களை ஸ்தாபித்து வழிபடுவது மரபு.

இதே நிலையில் ஒரு ஸ்தலத்தில் பல ஆண்டுகளாக ஸ்தல விருஷத்தின் அடியில் திரிசூலத்தை ஸ்தாபித்து அன்னை பராசக்தி மகா காளி எனவும் ஏகநாதப் பெருமாளைவும் நினைந்து வழிபாடு இயற்றி வந்தனர். வழிபட்டோரின் திரிகரணசுத்தி நிறைந்த பேரருள்

அன்பினல் இன்று அவ்விடத்தில் அழகிய கோபுரங்களுடன் கூடிய ஆலயம் அமைத்து விக்கிரகஸ்தாபனம் செய்து வரும் கார்த்திகை 9ந் திகதி (25-11-87) புதவாரத்தில் காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடத்த திருவருள் கூட்டி இருக்கிறது. ஆகவே, இதை எண்ணும்போது மக்களின் பண்பு, அன்பு, குணம் பக்தியின் தன்மை வெளிப்படையாக மிளிர்வதைக் காணலாம். எனவே, மந்திர பூர்வமாக வழிபடுவதால் இறைவன் இறைவியின் சிறந்த சான்னித்தியத்தை நாம் பெற முடிகிறது. எப்படி நமது உடம்பில் உயிர் நிலை பெறுகிறதோ அதே போல பன்மடங்கு மேலானது. தூலமாகிய கர்ப்பக்கிரகத்துடன் கூடிய ஆலயத்தில் சூக்குமமாகி லிங்கத்தை விநாயகர் தேவி முருகன் முதலான மூர்த்திகளை ஸ்தாபித்து வழிபடும் முறையாகும். இந்த உண்மையை ஐயந்திரிபற திருமூலர் கூறிய திருவாக்கு எடுத்துக் காட்டுகிறது.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான்இருந் தோம்புகின்றேனே
தேஹோ தேவாலய சிய ப்ரோக்தோ
ஜீவோ தேவ சநாதந என்பது ஸ்கந்த உபநிஷத்.

ஆகவே, அன்னை மகா காளி அம்பாளதும் பரிவார மூர்த்திகளதும் மகா கும்பாபிஷேகம் செய்ய அனுகூலத்துடன் இனிது நிறைவு பெறவும் இதன் வழி மலரும் கும்பாபிஷேக மலர் அழகிய அருள் சிறந்த சமயக் கட்டுரைகளுடன் செறிந்து மலர்ந்து மக்கள் இதய கமலத்தில் பதிந்து மக்கள் செவிப்புலன்வாய் அறிவு பெற வேண்டி அன்னை திருத்தாள் பணிந்து எமது ஆசியை சமர்ப்பிக்கிறேன்.

சுபம்

வையம் வாழ்க தமிழ் வளர்க திருவருள் பொலிக.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்

பிரதிஷ்டா சிரோமணி கிரியா கிரமஜோதி



பிரதம குருக்கள் – சமாதான நீதவான்
பிரம்ம ஸ்ரீ

# பா. சண்முகரெத்தின சர்மா

# ஆசிச் செய்தி

அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகியாகி, அகில உலகத்தையும் பெறாது பெற்றும் கன்னியாக விளங்கும் அன்னை பராசக்தி உலக மக்கள் உய்தி பெறும் பொருட்டு உலக முதல்வராய சிவபெருமானது இடது பாகத்தில் அருளே வடிவாக வீற்றிருக்கிறாள்.

சக்தி பீடங்கள் அறுபத்திநான்கு, காஞ்சியில் காமாட்சியாகியும், காசியில் விசாலாட்சியாகியும் மதுரையில் மீனாட்சியாகியும், நயினையில் நாகபூஷணியாகியும் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் சர்வலோகைகநாயகியாகி உலக மாதா வெள்ளவத்தை, மயூரா பிளேசில் பத்திரகாளி அம்பாளாக வீற்றிருக்கின்றாள்.

உலகத்தில் அநீதி மலிந்து நீதி மறைந்து, அதர்மம் நிறைந்து தர்மம் நலிந்து மனிதாபிமானம் அருகி, மனிதக் கொலை பெருகி, அராஜகம் தாண்டவமாடும் போது பத்திரகாளி அம்பாள் தனது மெய்யடியார்களுக்கு ஏற்படும் துயர்துடைத்து, தன்னைவந்து அன்புடன் வழிபடும் அடியார்களைக் காத்து இரட்சிக்கின்றாள்.

உலகமக்கள் அனைவரும் பத்திரகாளி அம்பாளது அன்புக் குழந்தைகளே. அம்பாளிடத்து அன்புடையவர்களாகி, அபிடேக ஆராதனை, அருச்சனை ஆகியவற்றைச் செய்து வழிபடும் அடியார்கள் தனலாப, தான்யலாப, வஸ்திரலாப, புத்திரலாப, வாகனலாப, உத்தியோகலாப, இராசரீகலாபம் முதலான சகல இலாபங்களையும் பெற்று மனதில் நினைந்தவை அனைத்தையும் நினைந்தவறே பெற்று இக, பர சௌபாக்கியம் அனைத்தும் உடையவர்களாகிப் பேரின்பப் பெருவாழ்வு அடையவர்.

25.11.87ல் நடைபெறும் கும்பாபிஷேகம் பத்திரகாளி அம்பாளை மயூரா பிளேசில் எழுந்தருளியிருந்த மெய்யடியார்களுக்கு இன்னருள் பாலிக்கச் செய்யும் என்பதில் பூரண நம்பிக்கையுடன் மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெற அம்பாள் கருணை பாலித்துள்ளாள்.

சர்வலோகங்களிலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து விளங்கும் பத்திரகாளி அம்பாளைக் கும்பத்தில் எழுந்தருளியிருக்குமாறு மந்திர, யாக, வேதபாராயண, திராவிட தோத்திர, மங்களவாத்திய, கீத, நிருத்திய, பாவனைகளால் அழைத்து, கும்பத்தை யாகத்தை யாகசாலையில் வைத்து சோடச உபசாரணைகளால் அம்பாளாகவே பாவனை செய்து, மூலமூர்த்தியாகக் காட்சிதரும் அம்பாளுக்கு அபிஷேகம் செய்யும் போது அம்பாள் அந்த மூலவிக்கிரக மூர்த்தியில் கும்பாபிஷேகம் நிகழ்ந்த நேரம் முதலாக, சாந்நித்தியமாக எழுந்தருளியிருந்து கருணை மழையின் தனது அடியார்களை நீங்கித் தினைக்கவைக்க வேண்டும் என்னும் ஆவலுடன் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் கோலாகலமான ஏற்பாடுகளுடன் நிகழ்த்தப்பெறுவது அறிந்து பெருமகிழ்வடைகிறேன்.

வெள்ளவத்தை, மயூரா பிளேசில் வீற்றிருந்துஅருள்பாலிக்கும் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் நிகழும் மகா கும்பாபிஷேகத்தில் நவாலியூர் பிரதிஷ்டா பூஷணம் சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதம குருவாகப் பொறுப்பேற்று நிகழ்த்துவது மிகப் பொருத்தமானதே. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான இடங்களிலுள்ள பல தேவஸ்தானங்களில் மகா கும்பாபிஷேகங்களை நடாத்திய, தெய்வீக சாந்நித்தியத்தினை மிளிரச் செய்த கைவண்ணப் பொலிவுடன் அருள்மலியச் செய்த சிறப்பும் உடைய பிரதிஷ்டா பூஷணம் சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களால் நிகழ்த்தப் பெறும் மகா கும்பாபிஷேகத்தினால் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயம் இலங்காபுரிக்கும், அகில உலகுக்குமே திருவருள் பாலிக்கும் புதுப் பொலிவுடன் மிளிரும் என்பது எமது அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும்.

சிறந்த முறையில் நிகழ்த்தப்பெறும் கும்பாபிஷேக வைபவம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சமான வாழ்வு மலரச் செய்ய வேண்டும் என்றும், அம்பாளை வழிபடும் மெய்யடியார்களது இல்லங்களில் இன்பம் பொலிய வேண்டும் என்றும், நாட்டில் அமைதி கிடைக்க வேண்டும் என்றும், கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஊக்கத்துடன் பங்குகொள்ளும் அனைவருக்கும் அம்பாளுடைய பரிபூரணமான அருள் பெருக வேண்டும் என்றும் பத்திரகாளி அம்பாளது பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து கும்பாபிஷேகம் பூரணப் பொலிவுடன் நிறைவுபெற எமது நல்லாசிகளை நல்குகிறேன்.

ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தானம்
கப்பித்தாவத்தை

தேவஸ்தான நித்தியப் பணியாளர் - பூஜகர்

# சிவத்திரு சி. பஞ்சாட்சர சர்மா

# நல்லாசி மொழி

குபேரபுரியாம் தெக்ஷணகைலாயம் என்னும் இலங்கையின் தலைநகரின் வெள்ளவத்தை மயூரா இடத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத் பத்திரகாளியம்பாள் அடியார்களுக்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

சுயம்புத்தலமாக வளர்ந்த இப்பதி இன்று பக்தர்களால் அற்புத ஆலயமாக உருவாகி இருக்கின்றது. சகல பிணிகளுடனும் தன்னையடைந்தவர்களுக்கு சகல விதமான தோசங்களையும் நீக்கி சகல சௌபாக்கியங்களையும் வழங்கும் தாயாக இருப்பவள் எம்தேவி.

இன்று பல திக்குகளிலுமிருந்து பக்தர்கள் அம்மனை நாடி வருகின்றார்கள். இந்த மகத்துவம் மேலும் மேலும் வளரும் என்பது என் திடமான நம்பிக்கை. அவளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்.

அன்னை அருள் எல்லார்க்கும் கிடைத்து எல்லாரும் இன்புற்றிருப்பது அல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்ற திருவாக்கின்படி இந்த ஆலயத்தில் நித்திய பூசைப்பணியாளனாக இருக்கக் கிடைத்த பெரும் புண்ணியத்தை மனதில் நினைத்து ''யாவரையும் நீ காத்து ரட்சிப்பாய்'' என்று வேண்டி என் ஆசிகளை இந்த மலருக்குச் சமர்ப்பிக்கின்றேன். உன் திருவடிகளைப் பூஜிக்கின்றேன்.

கைகளில் டமருகம் பாசம் சூலம், கபாலம் ஏந்திட- உன்பேர் சொன்னவர்க்கு தொல்லை வினை நீக்கி ஊர் அனைத்தும் பொங்கலிட சுகமளிப்பாய்.

மங்களம் – ஜெய - மங்களம்

BEST COMPLIMENTS

FROM

V

# D. MOHAMED ABDEEN & SONS

CUSTOM HOUSE AGENT,
CLEARING TRANSPORT & CONTRACTORS

118/3, CHURCH ROAD,
MATTAKULIYA,
COLOMBO - 15.

அதி உத்தம சனுதிபதி

## திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன

அவர்கள்

கருத்துரை

---

# அடிப்படையில் ஒரு ஒற்றுமை



இந்து மக்களுக்கும் பௌத்த மக்களுக்குமிடையில், சமய அடிப்படையிலே ஒரு ஒற்றுமை நிலவுகிறது. இந்த ஒற்றுமைதான் இரு இன மக்களையும் அன்பாலும் பண்பாலும் பிணைத்து வைத்திருக்கின்றது.

இரண்டு சமயத்தைச் சார்ந்தவர்களும் தர்மத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். அதர்மமான காரியங்களை அவர்கள் அங்கீகரிப்பதில்லை.

பாவ புண்ணியங்களில் இரு சமயத்தவர்களும் ஒரே விதமான அபிப்பிராயம் உடையவர்களே. கர்மபலன் என்பதிலும், மறுபிறவி என்பதிலும் கூட அவர்கள் ஒருமித்த கருத்துடையவர்களே.

ஆசையை அகற்றவேண்டும் என்பது இரு சமயங்களினதும் அடிப்படைக் கோட்பாடு ஆகும். ஆசையே அனர்த்தங்களின் ஆதி வித்து என்பதிலும் அவர்களிடம் வேறுபட்ட கருத்துக் கிடையாது.

இலங்கையிலுள்ள பல பௌத்த விகாரைகளிலும், தேவாலயங்களிலும் இந்து சமயக் கடவுளர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் இந்துக்கள் புத்தர் பெருமானை மகா விஷ்ணுவின் திருவவதாரமாக எண்ணி வழிபடுகின்றனர்,

தலதா மாளிகையைச்சுற்றி இந்து தேவாலயங்கள் உள்ளன. பெரஹரா வேளையில் இந்த ஆலயங்களிலிருந்தும் இந்து சமய தெய்வங்கள் பிரகாரமாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

பண்டைய ஜயவர்த்தனபுரத்தின் நான்கு திசைகளிலும் இந்து தெய்வங்களைக் காவற் கடவுளர்களாக அமைத்திருந்தார்கள் என்பது சரித்திரம் கூறும் உண்மையாகும்.

இலங்கையில் அமைந்துள்ள கதிர்காம ஆலயமானது இரு சமயங்களினதும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் மஹா தேவாலயமாகும்.

இரு சமயங்களுக்கிடையிலும் இவ்வாறாக இரண்டறக் கலந்த தத்துவங்கள் தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தப் பயன்படுகின்றன.

[அதி உத்தம சனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள்
ஆற்றிய உரையொன்றின் சிறுபகுதி இதுவாகும்]

Best Wishes

from

V

**Klevenberg (Pte) Ltd.,**

HARRSION & CROSSFIELD BLDG.,
330, T. B. JAYA MAWATHA,
COLOMBO-10.

Tel :— 598491

492, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-10.

Tel :— 24687



ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன
சபை ஆலோசகர்

# திரு. பொ. வல்லிபுரம் ஜே. பி.

(சுங்க அதிகாரி)

அவர்களின்

## ஆசிச் செய்தி

அகில உலக நாயகியான ஆதி பராசக்தியை பல நாமங்கள் கொண்டு வணங்கி வருகின்றார்கள். சக்தி வழிபாடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல உலகம் தோன்றிய காலம் தொட்டே சக்தி வழிபாடு பல ரூபங்களில் காலத்தால் அழிக்கப்படாமல் இருந்துவருகின்றது.

வெள்ளவத்தை மயூரா பிளேசில் அமைந்துள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயம் எட்டு மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. பல வருடங்களாக அம்பாளுக்கு ஓர் நிரந்தரக் கட்டிடம் இல்லாத குறையை ஆலயத் திருப்பணிச் சபையார் பக்தி சிரத்தையோடும் மிகுந்த துணிச்சலோடும் அயராது உழைத்ததினால் மகா கும்பாபிஷேகமும் சிறப்புற நடைபெறுகின்றது. தென் கொழும்பு வாழ் மக்களுக்கு அன்னையின் அருள்மழை என்றும் பொழிய வேண்டும். பொதுவாக சாந்தியும் சமாதானமும், நிலவவேண்டும் என்று தேவியின் பாதாரவிந்தங்களிலே வணங்கி வாழ்த்துகின்றேன்.

சுபம்

Best Wishes

from

# MAN POWER SERVICES

3/16, SCHOFIELD PLACE,
COLOMBO-3

Tel:— 580567

*Message from*

# Hon. Anura Bastian,

*M. P. for Colombo West and Deputy Minister of Defence*



It gives me great pleasure to send this message on the occasion of the opening of Sri Bathrakali Amman Kovil at Mayura Place in Havelock Road—Colombo West electorate.

This has been a residential area and the origins belong to the workers of the Wellawatte Spinning and weaving Mills where people of all races have lived in peace, amity and friendship.

A Bo tree and a Magosa tree had been planted by a worker of the Wellawatte Spinning and Weaving Mills and these are now over 100 years old. The people of the area first started lighting a lamp in worshiping Sri Bathrakali God.

Mayura Place will never be forgotten as it remains a strong-hold of the ruling United National Party. His Excellency the President J. R. Jayawardane had paid many visits to Mayura Place when His Excellency was a Member of Parliament of the area and even after he became the President of Sri Lanka, one of his visits was to Mayara Place to great his people at Mnyura Place.

The two trees which I have mentioned were sacred to the people of the area and this helped Mr. E. P. Subramanian and the other well - wishers to construct the Kovil at these premises for the well-being of all the people and to enable them to worship Bathrakali Amman.

The untiring efforts of Mr. P. Vallipuram, J. P. in particular made the dream of the residents a reality and Sri Bathrakali Kovil will be opened ceremonially on the 25th of Nov. 1987 which will remain as a monument to the efforts made by all the well-wishers who valued peace and amity between all races.

It is my duty to thank the Hon. Minister of Hindu Affairs, Hon. C. Rajadurai, for all the help and assistance given to the Organisers and in donating four statutes for this Kovil on a request made by me on behalf of the Organising Committee.

# BEST COMPLIMENTS

## FROM

# Devi Trading Co.,

No. 125, BANKSHALL STREET,
COLOMBO-11.

பிரதேச அபிவிருத்தி,


இந்துசமய, இந்துகலாசார அமைச்சர்

# மாண்புமிகு

# செல்லையா இராசதுரை

அவர்களின்

# ஆசிச் செய்தி



"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. மனித வாழ்க்கையை பக்தி நெறியின் மூலம் அர்த்தமுள்ளதாக்கி வாழ்வின் குறிக்கோளாகிய ஆன்ம ஈடேற்றத்திற்கு இட்டுச் செல்ல உதவும் பயிற்சிசாலைகளாக ஆலயங்கள் காணப்படுகின்றன. இந்து சமயிகளின் கலாசார பின்னணிகள், பாரம்பரியம், பழக்கவழக்கம் போன்றவற்றை பிரதிபலித்துக் காட்டுவதுடன், உலக சிருஷ்டியின் அளப்பரிய தத்துவங்களையும் தன்னுள் அடக்கி வெளிக்காட்டி நிற்பது இவற்றுக்கேயுரிய தனிச்சிறப்புகளாகும்.

இந்துமதம் மிகப்பழமை வாய்ந்தது. அன்னையை தெய்வமாக போற்றி வழிபடுவதும் இதன் மரபுகளின் ஒன்று. நவசக்திகளில் ஒரு சக்தியாகி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு ஆலயம் உருவாக்கியிருப்பது உள்ளத்துக்கு மகிழ்ச்சி தருகின்றது. கொழும்பு மயூரா பிளேசில் எழுந்தருளியிருக்கும் அன்னையின் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற இறைவன் திருவருள் பாலித்துள்ளது.

வெள்ளவத்தை இந்துப் பெரு மக்களின் நீண்டகால ஆசை இப்பெரு முயற்சியின் மூலம் நிறைவேறியுள்ளது, "மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம்" ஒளிவீசி பிரகாசிக்க திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

செல்லையா இராசதுரை,
பிரதேச அபிவிருத்தி,
இந்துசமய, இந்துகலாசார அமைச்சர்.

COMPLIMENTS

FROM

ROBERTS FREIGHT FORWARDING AGENCY

GENERAL SHIPPING AND FORWARDING,
INSURANCE PACKING STORAGE,
TRANSPORT TRAVEL.

15. FIRST FLOOR.
GAFFOOR BUILDING.
COLOMBO - 1

**S. Thondaman, M.P.**
Minister of Rural Industrial Development

13th November, 1987.

The President,
Sri Bathrakali Amman Kovil,
35/44, Mayura Place,
Havelock Road,
Colombo 6.

Dear Sir,

Maha Kumbabisegam Ceremony.

I thank you for your letter dated 28th Oct. 1987 inviting me for the Maha Kumbabisegam Ceremony on the 25th Nov. 1987.

I regret very much my inability to attend the function due to prior engagements.

I wish the function all success.

Yours faithfully,

S. THONDAMAN, M.P.
MINISTER OF RURAL INDUSTRIAL DEVELOPMENT.

*with best*

*compliments*

*from*

FOR
ALL KINDS OF
ROOFING SHEETS
&
G. I. PLAIN SHEETS

FOR
ROOF MAINTANANCE
SYSTEMS BY WORLD
FAMOUS "*SWEPCO*" ROOFING
PRODUCTS FROM U. S. A.

V

# DEV AND SREE ENTERPRISE


19, ABDUL JABBAR MAWATHA,
COLOMBO-12.

T'phone : 546130, 27044

*Message from*

# Edward Edirisooriya

*The Municipal Member for Wellawatte Ward*



Baddhrakali Amman Kovil is situated under the shade of an ancient bo - tree in Mayura Place near the Wellawatte Weaving Mills. For the devotees of the Hindu religion, God Baddhrakali is an important God.

The history of this Devalaya goes back to about 100 years when it was first started by planting a bo - tree and placing a "Thrisulaya" at this place.

Reconstruction of this Devalaya commenced in Feburary 1987. A special feature of this Devalaya is that arrangements have been made for the devotees to worship all the Gods at this place.

I wish to express my thanks to the Board of Trustees for taking steps to construct this Devalaya amidst difficulties. I bless that this Devalaya will flourish day by day.

*with the best*

*compliments*

*from*

# Tata Industries

99/2, 2nd CROSS STREET
COLOMBO-11.

*Message from*

# BERNARD PERERA

*Member of Colombo Municipal Council*



People of all races live in Colombo - the Capital City. I feel proud that people of all races in my constituency got together and constructed this Kovil. I am very happy about it and sincerely welcome this effort.

The whole world believes that Goddess Kali is 'all powerful. I pray that such Supreme Daity should provide protection to all.

I pray that all should continue to be united like this and there should be peace and amity in the Country.

I wish this "Malar" to bloom out very well.

# BEST WISHES

# FROM

V

# Elaan Garments Manufactory

45, VISTXYK ROAD,
COLOMBO - 14

Tel :— 522427

*Message from*

# Mr. P. M. Jayasinghe

Light is the same even if there are a thousand lights.

Water is the same even if there are a thousand rivers.

The Purpose of prayer is the same in all the religions.

Sri Pathirakali is the worlds greatest power. Those who defied her never lived. Those who worship her never failed in life. She is sweetest companion at present as well.

Such a great mother has found an abode at Mayura Place where a Sacred Bo - tree and a Komban tree have enlivened together. I feel very happy. The Unity of the races in this area also takes the same form, as the above two trees. The Bo tree under which the Lord Buddha Enlightment and the margosa tree considered Sacred by the Hindu Kali devotees. Entrine for the good of both the communities. This is a devine action of mother Kali is the origin of everything. I submit my humble prayers at her feet, and pray for her blessings to every one and the country.

My best wishes for this " MALAR " to bloom out well.

Thank you,

TRANSWORLD AGENCY POST OFFICE
No. 19 Maya Avenue
P. O. 1083
Colombo - 6

## Aruna Textile

*No. 91, 1/4*
*2 nd Cross Street*
*Colombo 11.*

"ஸ்ரீ . பத்ரகாளி"
அன்னை அருள் புரிவாராக



ஸ்ரீ பத்திரகாளி அம்மன்
அனைவருக்கும் அருள்புரிய வேண்டுகிறோம்

## Happy Movie Centre

91 *A. S. Mohamed Building*
*No. 5, First Floor*
*2 nd. Cross Street,*
*Colombo 11.*



தாயே நீயே துணை

## Mr. & Mrs. Udayakumar

*216, Weliyamuna Road*
*Hekitta*
*Wattala*



COMPLIMENTS

FROM

## N. Ravindran

*Outdoor Photographer*
*72, Wilson Street*
*Colombo - 12*

# BEST WISHES

# FROM

## Lanka Universal Garments Exports

50, K. CYRIL C. PERERA MAWATHA

COLOMBO-13.

---

# Best Wishes

# from

## HANIFFA MOTORS

DEALERS IN JAPANESE MOTOR SPARES

TYRES & TUBES

490, Galle Road
Colombo - 6

Phone : 588081
714168

*Associates of :-*

## LANKA CARRIERS

INTERNATIONAL AIR & SEA FREIGHT FORWARDERS

With the Best Compliments

from

# FREIGHT SERVICES (PVT) LIMITED

COMPLIMENTS

FROM

# KANNAN TRADE CENTRE

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES
&
FANCY GOODS

Lucky Paradise Super Market,
53. 28 / 5. 2nd Floor, Keyzer Street,
Colombo 11.

# “மயூரா பதிமீது வா”

தஞ்சம்மென் றேயுன்னைத் தாழ்பணிந்து வேண்டுகிறோம்
நெஞ்சங்களித் தாடுமாகா ளியப்பா அஞ்சலித்து
நேயமுடன் வேண்டுகின்ற அன்பர்மனம் மகிழ்ந்திடவே
மயூரா பதிமீது வா

நெய்தல் நம்பி

மயூரா பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய

மகா கும்பாபிஷேக

சிறப்பு மலர்

## வெளியீட்டு குழுவினர்

| | |
|---|---|
| ஆலோசகர் : | திரு. பொ. வல்லிபுரம் J. P. |
| ஆசிரியர் : | திரு. பெ. சோமாஸ்கந்தர் |
| உறுப்பினர் : | திரு. இ. கிருஷ்ணன் |
| ,, | திரு. K. V. சுரேஸ் |
| ,, | திரு. மு. முருகையா |
| ,, | திரு. ஏ. நாராயணன் |
| ,, | திருமதி. நிர்மலா விஜயகுமார் |

# BEST WISHES FROM

## A.H.A. Azeez M.H. Badurdeen

**AGENTS FOR ALL TYPE OF INSURANGE**

**N. I. C. — I. C. S. L.**

*Office :—*

223, 2nd CROSS STREET,
COLOMBO-11.
Tel :— 29372

*Residence :—*

42, ARETHUSA LANE
WELLAWATTE,
COLOMBO-6.
Tel :— 500556



# ஆலய பரிபாலனசபைத் தலைவர் நல்லுரைகள்

எங்கள் வாழ்க்கையில் கோயில் அமைவது நாங்கள் செய்த புண்ணியம். அதிலும் இப்படி அழகான ஆலயம் அமைவது எங்கள் எல்லோரதும் இதயபூர்வமான பிரார்த்தனையின் பலன்.

என் வாழ்வினில் நான் எதிர்பார்த்து என்றும் வழிபட்டதும் இந்த எண்ணத்துடன் தான். நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு — மறையின் உட்பொருளே அன்னை தாயே. எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை.

எத்தனையோ இடையூறுகளை எல்லாம் நீக்கி, எங்களுக்கு பக்கபலமாக நின்ற தாய் எங்கள் வாழ்க்கையின் ஆதாரம்.

ஆலயப் பணிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி வந்த நிலைமையை, அன்னையின் ஆணை என்றே ஏற்றுக் கொண்டேன். அந்த தலைமையை எனது சபையின் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் என்னாலான அளவுக்குச் செயல்படுத்தினேன். அதுதான் என்னால் ஆகக் கூடியது.

இந்த ஆலயப் பணிகளுக்கு ஆக்கபூர்வமான அரசியல் ரீதியான ஆதரவு தந்த எமது தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. அநுர பஸ்தியன் அவர்களை என்னால் மறக்க முடியாது. அதுபோல், ஆபத்தான நிலையில் கைகொடுத்து உதவிய பெருந்தகையார் வல்லிபுரம் ஐயா எங்களால் என்றும் போற்றப்பட வேண்டியவர்.

மேலும், எம்மோடு ஒத்துழைத்து அரும்பணி புரியும் சபையினர், பொது மக்கள், எல்லார்க்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ஆலயம் அமைய அரும்பணி புரிந்த ஸ்தபதியாரும், மலர் வெளியீட்டுக் குழுவினரும், மறக்க முடியாத் பணி புரிந்திருக்கின்றனர்.

இவை யாவும் நமது செயல் என்பது இல்லை. யாவும் அவன் ஆடல். எனவே, நாம் இனிவரும் காலத்தில் இன்று போல ஒன்றாக இணைந்து அன்னையை வழிபட்டுச் சகல நலமும் பெற்று வாழ வேண்டுமெனக்கூறி, அன்னையின் திருவடிகளுக்கு என் நெஞ்சம் நிறைந்த அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

இ. பி. சுப்பிரமணியம்

*Best Compliments*

*from*

# Naina Mohamed & Sons

*Importers & Custom House Agent*

No. 55, DE WAAS LANE,

GRANDPASS ROAD,

COLOMBO-14.

Tel :— 549803



பரிபாலனசபை உபதலைவர்

# ஓ. புருஷோத்தமன்

## அவர்களது

# வேண்டுதல் உரை

நாற்பது வருடமாக இங்கு வாழ்ந்து வரும் எனக்குக் கடந்த பதினைந்து வருடங்களாக ஆலயம் வழிபாடு, தெய்வம் என்ற எண்ணங்கள் என்னை ஆட்படுத்தி வந்தன.

இந்த ஆட்பாடு அன்னை ஸ்ரீ பத்திர காளியின் கிருபை எனப் புரிந்து அவளின் பணியில் ஈடுபாடுற்றேன். நல்லதொரு ஆலயம் அமைய வேண்டும் என்று பிரார்த்தித்தேன். என்னைப் போல எல்லாரும் வேண்டினார்கள். வேண்டுதல் வீண் போகவில்லை. அற்புதமான கோயில் வந்து விட்டது காளியின் செயலால்.

நாளும், மக்கள் வழிபட ஆலயம் வந்ததால், நல் வழி வாழ வேண்டும் என்ற மனப்பூர்வமான ஆசை ஒன்றுதான் இப்போது என் மனதில் இருப்பது. எல்லார்க்கும் நன்மை தரக்கூடியவாறு அனைவரும் நடந்து கொள்வோம்.

நல்லவருக்கு நல்லவள்
வல்லவருக்கு வல்லவள்
தீயவருக்குத் தீயவள்
யாவும் அறிந்தவள்

என்ற பயம் எல்லார் மனத்திலும் இருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை இதய சுத்தியாக ஏற்று அன்னையை வழிபட்டு உய்ய வேண்டும் என்று, எனது பணிவான வேண்டுதலை உரைக்கின்றேன்.

# BEST WISHES

# FROM

## SUWAIRA CLEARING AGENCY

*Custom House Agent & Clearing Forwarding Agents*

ZULFA MAHAL

933, ALUTHMAWATHA ROAD,

COLOMBO-15.

Tel : 522403



# செயலாளர் சிந்தனைகள்

என் தந்தை சிறந்த சித்திரக் கலைஞர். அதிலும் தெய்வப் படங்களை வரைவதில் தெய்வீகக் கலைஞர். அவர் வழி என்னால் செல்ல முடியவில்லை. நான் கட்டட நிர்மாணக் கலை பயின்றேன். அந்நாளிலிருந்து, ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும். அழகு மிளிரும் அற்புதக் கலைக் கூடமாகக் கட்ட வேண்டும்; என்ற ஆசை துளிர்த்தவண்ண மிருந்தது. ஆனால் அதற்கான பொருள் வசதி என்னிடம் இல்லை. இந்த நேரத்தில் அம்மனின் மடாலயத்தை பார்க்கக் கிடைத்தது; கடலளவு நினைத்த எனக்குக் கையளவு கிடைத்தது போலிருந்தது. மடாலயம் மாட ஆலயம் ஆகாதா என்ற ஆசை தான் மீண்டும் தோன்றியது.

ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயம் எழுந்த போது, ஆனைப் பசிக்கு அவல் கிடைத்தது. எனவே ஆலயத்தை மேலும் வளர்க்க வேண்டும் என்ற வைராக்கியந்தான் எஞ்சியது.

இச் சந்தர்ப்பங்களில் என் கனவுகளில் அன்னை தோன்றினாள். அற்புதமான லீலைகள் காட்டினாள். அவைகள் என்னை ஒருவித பித்தன் ஆக்கியது. அப்படிச் சொல்லும் நிலையும் எழுந்தது. அன்னை அருளால் அரிய திருப்பணியால் அற்புதமான ஆலயம் அமையத் தொடங்கிற்று. கனவு லீலைகள் காட்டிய காளி நனவில் கோயிலையே கட்டிவிட்டாள். திருப்பணி தொடங்கிய போது அடியேனும் அப் பணிக் குழுவில் இப் பணியாளன் ஆனேன்.

வேலை தொடர்ந்த போது எதிர்பாராத விதமாக அந்தப் பெரிய விபத்து நடந்தது. மேற்கூரைக்கான இரும்பு உத்தரம் திடீரென வீழ்ந்தது என் தலையில் வீழ்ந்திருக்திருக்க வேண்டும். அப்படி ஒரு பிரமை எனக்கு. ஏன் தெரியுமா. அருகோடு என்னை உராய்ந்து கொண்டுவிழுந்தது. ஆனால் அப்படி ஏதும் எனக்கு நடக்கவில்லை. காளியை தப்பிலேன். காப்பாற்றிவிட்டாள். 'ஓம் சக்தி' என்று உரைத்துத் திணறிய மூச்சை சரிவர இயங்கவைத்தேன்.

கொடு நோயால் நடக்க முடியாத முடம் ஆவேனோ என்ற கவலை; கண்ணீர் பெருகியது. அன்னை என் கண்ணீர்க்கு மருந்து அளித்தாள் கால்களுக்கு பலந்தந்தாள். எழுந்து நடக்கவும் வைத்தாள். அவள் தந்தது இந்த மறு வாழ்வு. அது உயிருள்ள வரை அவளது பணிக்கே, பயன்படட்டும்; என்ற சங்கற்பந்தான் இப்போது எனக்கு.

இது அற்புதமான - அழகான - ஆலயம். மகா கும்பாபிஷேகம் இன்று காணுகிறோம். தமது வாழ்நாளில் இதுதான் பொன்னாள். என்போம்; நாம் செய்த புண்ணியம் என்போம்; இனியொரு கவலையுமில்லை; காளியம்மாள் தீர்ப்பாள்; யாவும் அவள் தருவாள் அவளைத் தொழுவோம்; இன்பமே வேண்டி நிற்போம்; இணைந்து வாழ்வோம்; என்றும் வாழ்வோம். அஞ்சலிகள் கோடி கோடி அன்னை திருப்பாதங்களுக்கு

K. V. சுரேஸ்

(கட்டட நிர்மாணக் கலைஞர்)

# Compliments

# from

# GAYLORD ENTERPRISES

63, MALIBAN STREET,

COLOMBO-11.

Tel :— 27935 24792, 27644 Telex No:— 21566 HAWAI CE

**DUTY FREE SHOP**

Tel :— 540250



பொருளாளர்

# போற்றும் பொன்னுரைகள்

இன்று அழகான ஆலயம் அமைந்து விட்டது. ஆகாயம் மேவிய அரசின் கிளை போல், அதன் வனப்பும் புகழும் மேலோங்கி விட்டது. ஆனால், அன்று இந்த ஆலயத்தை வளர்த்து எடுக்க நாம் செய்த போராட்டங்கள் என் நெஞ்சில் இன்றும் நிழலாடுகின்றன. சிவப்பிரகாசம் பேராயிரம் உடையாருடன் இணைந்து நின்று ஏகாம்பரம் கங்காணியிடமிருந்து ஆலயத்தை மீட்டெடுத்த வரலாற்றுச் சுவடுகள் மறக்க முடியாதவை. அன்று முதல் இன்று வரை இந்த சக்தியின் ஆலயத்தினைக்கட்டி எழுப்பும் பணியில் என்னையே ஈடுபடுத்தி விட்டேன் என்று நான் சொல்வதிலும் பார்க்க, அன்னை தான் என்னை பணித்தாள் என்று சொல்வதுதான் பொருத்தம் என்பேன்.


கோயில் பூரணப்படுத்தியபின் கும்பாபிஷேகம் காணும் பெரும் பணி தொடங்கியது. அது நமக்கு ஒரு கன்னி முயற்சி. அனுபவமில்லாத அரிய செயல். நமக்கு

வழிகாட்டச் சிலர் வந்த பின்னர், விபரம் ஓரளவு புரியலாயிற்று. அதன்பின் மேலும் மேலும் இந்தப்பணியில் வேகமும், விபரமும் தொடர்ந்தது. எங்கு சென்றாலும் கும்பாபிஷேகம் என்ற சிந்தனைதான்; அதற்கான நிதிதான்; எந்த நண்பரைக் கண்டாலும் சரி, எதிர்பாராத நல்லவர்களைச் சந்தித்தாலும் சரி, எனக்குச் செல்வாக்குள்ள இடமானாலும் சரி, அத்தனை அறிமுகங்களையும் அன்னையின் ஆலயத் திருப்பணிக்கே பயன்படுத்தினேன்.

நிதியைச் சேகரித்து அன்னை பதியைப் பேணுவதுதான் எனது முதல் நோக்கம். அது எனது ஏக்கமாக மாறாமல் காளி பாதுகாத்தாள். பிடியளவு எதிர்பார்த்துச் சென்றால், படியளவு கிடைக்கும் மாயத்தை அன்னை செய்திருந்தாள். அதனால், ஆலயத்திருப்பணியும் கும்பாபிஷேகமும் எண்ணிய எண்ணிபாங்கு நிறைவேறின. இவை எல்லாம் எனது ஆற்றல் என்றுரைப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை. யாவும் அவளுடைய சங்கற்பம்.

மேலும், இந்தப் பதி சிறந்திட எவ்வளவோ காரியங்கள் ஆக வேண்டியுள்ளது. இன்று நாம் வணங்கும் இத் தேவி நகரறிந்தவளாக, நாடறிந்தவளாக, பல்வேறு இடத்திலிருந்தும் அடியார்கள் அணி அணியாக வந்து தொழும் தேவியாகப் புகழோங்கும் எதிர்காலம் ஒன்று அடியேன் மனதில் உருவாகிக் கொண்டே வருகின்றது. அது நிச்சயம் நடக்கும் என்ற நம்பிக்கையும் எழுகிறது. ஏனெனில் காளி அன்னையின் வல்லமை அளப்பரிது. ஆகவே, நாம் அவளைப் பக்தி சிரத்தையுடன், பணிந்து போற்றி வளம் பல பெற்று பல்லாண்டு வாழ்வோமாக இது நமது கோயில், நமது காளி என்ற எண்ணத்துடன் ஒன்றான மனதுடன் வாழ்வோமாக !

இ. கிருஷ்ணன்




# மூலத்தான அன்னையின் சிலை வடிவும்

கலைகள் அனைத்தினுக்கும் தாய் — இங்கே
சிலையின் வடிவினில் சிங்காரக் கொலுவிருக்கின்றாள்.

மூலத்தானத்தில் முழுமுதலான ஸ்ரீபத்ரகாளியின் எழில்மிகு தோற்றமிது.




Compliments
from
RAMSONS TERRAZZO BUILDERS
443, OLD MOOR STREET,
COLOMEO -12.

உ

# கொழும்பு மாநகர் வெள்ளவத்தை மயூரு பதி
# ஸ்ரீ மகா காளி அம்பாள் கோயில்

# மகா கும்பாபிஷேகம்

கார்த்திகை மாதம் 5ந் திகதி (21 - 11 - 87) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கிரியாரம்பம்.

கார்த்திகை மாதம் 7ந் திகதி (23-11-87) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு யாக ஆரம்ப பூஜைகள், ஹோமங்கள், தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், பிம்பஸ்தாபனம்.

கார்த்திகை மாதம் 8ம் திகதி (24-11-87) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாக பூஜை ஹோமங்கள், தீபாராதனை, காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை பக்தர்கள், அம்பாளுக்கு எண்ணை காப்பு சாத்துதல்.

மாலை 6 மணிக்கு யாக பூஜை, ஹோமம், பூர்வபச்சிம சந்தானம், தீபாராதனை.

கார்த்திகை மாதம் 9ந் திகதி (25-11-87) புதன்கிழமை காலை 6 மணிக்கு யாகபூஜை ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத தேவாரபாராயணம் காலை 9 மணிககு தூபி கும்பாபிஷேகம். 9.30 மணிக்கு மகா கும்பாபிஷேகம் மங்கள தரிசனம்.

மகாபிஷேகம், தீபாராதனை, ஆலயங்களின் வரிசைகள், பட்டு சாத்தி காணிக்கை, அர்ச்சனை ஏற்று அருள் பிரசாதம் வழங்குதல்.

மாலை 6 மணிக்கு சாயரட்சை பூஜை, சதுஷ்ஷ்டி உபசார பூஜை, மூல மந்திர திரிசதி நாம அர்ச்சனை, பிரசாதம் வழங்குதல்.

தொடர்ந்து 45 தினம் மண்டலாபிஷேகம் நிகழ இருப்பதால் உபயம் செய்வோர் நிர்வாகத்திடம் தொடர்பு கொள்ளவும்.

சுபம்

Best Wishes

from

ANOON

Clearing & Forwarding Agency

77 A & 79 A, MAIN STREET,
COLOMBO-11.

Tel :— 548721

# கொழும்பு வெள்ளவத்தை மயூரு இடம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில் பரிபாலன சபையினர் விபரம்

## நடப்பு வருடம்

| | |
|---|---|
| ஆலோசகர் : | திரு. அனுரா பெஸ்த்தியன் M. P. |
| ஆலோசகர் : | திரு. பி. வல்லிபுரம் J. P. |
| தலைவர் : | திரு. இ. பி. சுப்பிரமணியம் |
| உபதலைவர் : | திரு. ஓ. புருஷோத்தமன் |
| செயலாளர் : | திரு. கே. வி. சுரேஷ் (கட்டிட கலை நிபுணர்) |
| உபசெயலாளர் : | திரு. எம். முருகையா |
| பொருளாளர் : | திரு. இ. கிருஷ்ணன் |
| உபபொருளாளர் : | திரு. என். மோகன்தாஸ் |

## செயற் குழுவினர்

திரு. கே. பிரதாபன்
திரு. டி. சண்முகநாதன்
திரு. எஸ். யோகேந்திரன்
திரு. கே. பாலசுப்பிரமணியம்
திரு. டி. எ. அசோகன்
திரு. வி. சிவப்பிரகாசம்
திரு. எஸ். சகாதேவன்
திரு. இ. ரகுபதி
திரு. கே. கே. அசோக்குமார்
திரு. எம். விஜியேந்திரன்
திரு. பீ. எஸ். சந்திரசேகரன்

# அருள்மழை பொழியும்

# அம்பிகை

கீர்த்தனம்

பல்லவி

அருள் மழை பொழியுதம்மா — ஆனந்தமாக
மயூர பதி ஆளும்
ஸ்ரீ பத்ர காளியம்மா.


அநுபல்லவி

திருவடி தனைக்காட்டி
தெய்விக அர சோச்சி
மருவிடும் அடியவர்க்கு
மனமகிழ் வாழ்வளித்து — அருள்மழை.

சரணம்

உருவாகியே அன்னை —
வித்தகம் காட்டுகிறாள் — வேம்பில்
உருவாகியே அன்னை
வித்தகம் காட்டுகிறாள் —
கருவாகியே உள்ளக் கருத்தில் நிறைந்திடுவாள்
திருவாகி உலகெங்கும் தெய்வலீலை காட்டுகிறாள்
தித்திக்கும் முத்தமிழில் நித்தம் மகிழ்ந்திடுவாள்.

... உடப்பூரன்



# மனக்கோயில் மணித்தீபம்

(மலர் ஆசிரியர்)

இந்து மதம் ஒரு சனாதனதர்மம். ஆதி அந்தமில்லாத அரும்பெரும் சோதியை மூலமாகக் கொண்டு பிரபஞ்சத்தில் தானே எழுந்த சமயந்தான். ஆன்மீக தத்துவம் என்பது பரிபூரணமாக விளங்குவது இங்குதான். விஞ்ஞானம் எத்தகைய விந்தைகளைக் காட்டினாலும் அதனால், மெஞ்ஞானத்தின் சக்தியை வெல்லமுடியவில்லையே. அதனால்தான் இந்திய மெஞ்ஞானத்தின் மேலான தத்துவத்தை நாடி விஞ்ஞான யுகங்களிலிருந்து பல்லாயிரவர் வருகின்றனர். உடல்வளம் விஞ்ஞானம் என்றால் உயிர்வளம் மெஞ்ஞானந்தான்.

பரிதியின் கதிர்கள் ஏழுவர்ணங்கள் என்பர். 'ஏழுபரித் தேரோன்' என்பர் புராணிகர். ஒரே பெருஞ் சுடரில் ஏழு நிறம். ஒரே பரத்துவத்தில் பல பிரதி பரத்துவங்கள் யாவும் ஒன்றே! ''ஏகன் அநேகன்'' என்றார் மணிவாசகர். இவ்வாறே அறுவகை சமய நெறி எழுந்தது.

ஆதிமுதலே, அன்னையாக மூலசக்தியை ஆராதித்தனர். தாயிற் சிறந்த கோயிலுமில்லை. அன்னை வடிவே அன்புக்கு ஆதாரம். பாசமிக்க தாய்மைதான் உலகெல்லாம் பரந்தது; உலகெல்லாம் நிறைந்தது; தாய்மைப் பண்பு; சக்தி.

''காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் காதல் பெண்ணின் கடைக்கண் பார்வையில்'' என்றார் மகா சக்தி பக்தர் பாரதியார். ஆம் பெண்மையை விஞ்சிய பெருமையில்லை. அவள் அனைத்துக்கும் ஆதாரம். ஆதார சக்திதான் பராபரை.

''எங்கும் நிறைந்த சக்தி
எதிலும் உறையும் சக்தி
பொங்கும் கலையனைத்தும்
பூமியிலே படைத்த சக்தி''

—அன்னை பரந்து—நிறைந்து கலைகளாக நிற்கின்றாள். சர்வமும் கலையுள் அடங்கி விடும் — சர்வம் சக்தி மயம். கலையின்றி வாழ்வு இல்லை.

—மாதா எம் பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னை அல்லால் ஆரெமக்கு பாரினிலே—
என்று அழுதழுது அன்னையைத்தான் அழைக்கின்றோம்.
எங்கெங்கும் காணும் சக்தியடா - எழு
கடல் அவள் வண்ணமடா

என்ற சொல்லோவியம் சக்தியின் பரிபூரணம் என்ன என்பதனை பாடும்.

ஒரே மின்சக்தியில் எத்தனைவிதமான ஆக்கங்கள்; அழிவுகள்; சக்தி ஒன்றுதான்; இயக்கம் பலதான். ஆதிபரா சக்தி என்பவளே நமது மூலம் என்பர் தேவி மகாத்மியர்; தேவி மான்மியர். அவளே ஆயிரம் ஆயிரம் சக்திகளானாள். ஒவ்வோர் செயற்பாட்டுக்கும் அதன் தன்மைக் கேற்ப அற்புதமாக அந்தரத்தில் அவிர்ப்பவித்தாள் — ஆம் அவ்வப்போது தோன்றி அரிய காரியங்களைச் சாதித்தாள். அதனால் ஒரு வரலாறே படைத்தாள். அதன் மூலம் புதிய திருநாமம் பெற்றாள்.

அப்படி அன்னை பலகோடித்திருநாம தாரிணியானாள். ஒவ்வொன்றும் காரணகாரிய சம்பந்தமான திருநாமங்கள் கோடியான நாமங்களில் வாக்தேவதைகளாகி அவளே ஆயிரத்தெட்டுத் திருநாமங்களைத் தேர்ந்தாள் அவைதான் லலிதா சஹஸ்ரநாமம். திருநாமங்களுக்கிடையிலே திவ்வியமயமான சரிதை படைக்கின்றாள் சக்தி. அப்படியான வரலாறுகளின் வரப்பிரசாதந்தான் நவராத்திரி நாடகியர்.

சகல சக்திகளும் தேவியர் மூவருள் கிளைத்தனர் என்பர் சக்திதாசர்.

காளி என்பது - களிப்பு, ஆனந்தம் இன்பம் என்றதெல்லாம் பொருள் பொதிந்து வாழ்வூட்டும் உயிர்த் தத்துவ நாமம். களிப்பிலே உருவானவள் காளி. ஊழியின் முடிவிலே ஆடுபவள் காளி. காலம் கடந்தவள் காளி உயிரிலே கலந்தவள் காளி, உயிரைக் காப்பவளும் காளி. அதனால்தான் அவளை மங்கல நாயகி என்பர். மஞ்சள் குங்குமம் அருள்பவள் அவள். அதுவே பத்திரகாளி என்ற அன்னை நாமத்துக்குரிய அரிய பொருள்கள். மங்கலம் அருள்பவள் காளி. பத்திரம் என்பது மங்களம்.

கிராம வழக்கில் 'பத்திரம்' என்றால் வேம்பு இலை. வேம்பு அன்னை விருட்சமாகியது. வேப்பிலைக்காரி; விளைகாரி என்றெல்லாம் அன்னை படியாத மாந்தர் மனத்தகத்தும், வாயகத்தும் நினைந்து, வாழ்த்தப்படுகிறாள்.

கோயில்கள் உருவாகாத காலத்திலேயே காளி விருட்சங்களிலே கோயில்கொண்டாள். அவ்விருட்சங்கள் காலப்போக்கிலே ஆலயங்கள் ஆயின. அவைகள் தல விருட்சங்கள் ஆயின. இந்த அற்புதமான வரலாறு படைத்துத்தான் வெள்ளவத்தை மயூரா இடத்திலும் காளி அன்னை தான் ஆலயத்தை எழுப்பினாள். அவளது துணிவு அடியார் உளமெலாம் புகுந்திட எழுந்த அற்புத ஆலயந்தான் இது.

ஆலயப் பணிகளில் ஈடுபாடும், வைதீக நம்பிக்கையும்; சமூகசீர்திருத்த எண்ணங்களும் கொண்ட அடியேனுக்கு இந்த அற்புத ஆலயத்தினைக் காணும் ஒரு சந்தர்ப்பம் எதிர்பாராமல் கிடைத்தது. ஆலயக் கும்பாபிஷேகத்தின் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு ஆசிரியராகப் பணிபுரியும்படி, அன்னை ஆலய பரிபாலன சபையிலிருந்து அழைப்புக் கிடைத்தது.

முதன்முதல் அன்னை ஆதி சக்தி, பூதாசக்தி, ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்தைப் பார்த்தேன். என்னுள்ளம் பறி கொடுத்தேன். அவளது அருள்நிறை அந்தரங்க தரிசனம் என்னை

ஆட்கொண்டது. அன்னையின் திருப்பணியில் ஈடுபட்ட அடியார்களது அன்புப் பணியும்; உயர் பணியும் என்னை அவர்களுள் ஒருவனாக்கியது. அவர்களது விருப்பம் அன்னையின் ஆணை என்று புரிந்தேன்; ஏற்றுக்கொண்டேன். என் தாயின் ஆணையை என்னால் மீற இயலாது. ஏன்? என்னை வாழ வைக்கும் வீரபத்திர காளியல்லவா? மயூராபதியில் ஸ்ரீ பத்திர காளியாக இருக்கின்றாள். ஆடல்புரியும் ஆண்டவன்; நடராஜா மூர்த்தி ஆடலரசன் என்பர். அரச விருட்சம் சிவன்பதி எனப் போற்றப்படும். அதுபோலதான் வித்தகி, வேதான, வேதநாயகி சக்தி, வேம்பாகியுள்ளார் என்பர். விருட்ச வழிபாடு ஆரம்பித்த காலத்திலேயே சிவ சக்தி தத்துவம் அங்கும் ஆரம்பித்து எனலாம். அரசும் வேம்பும் சிவசக்தி ஐக்கியம் என்பர். அப்படி இணைந்திருந்தால் அஸ்வத்தப் பிரதட்சணம் என்பர். இவ்விரு மரங்களும் இணைந்து நிற்கும் போது இவைகளை வலம் வருதலையும் அஸ்வத்தப் பிரதட்சணம் என்பர். கல்யாணப் பிராப்தம் தடைப்படுபவர்கள், சந்தான சம்பந்தமில்லாதவர்கள். இப்பிரதட்சணம் செய்வதால் குறைதீர்வார்.

இத்தகைய பெருமைமிகுந்த தலத்திலே அன்னை ஸ்ரீ பத்திரகாளி ஆலயம் அமைந்த சிறப்பு தெய்வானுகூலமானது தான். சின்ன ஆலயத்துள் பல தேவாதி தெய்வங்களையும் தன்னுடன் எழுந்தருளச் செய்த அன்னை கொலுவிருக்கச் செய்து பரிபூரணமான தெய்வீக சாம்ராஜ்ஜியத்தையே நடத்துகிறாள் ராஜராஜேஸ்வரியான காளி. அரசினையும் வேம்பினையும் வலம் வரும் போதே அத்தனை தெய்வங்களையும் தரிசித்து ஆசி பெற்று மனநிறைவுடன் நாம் திரும்பலாம். சின்னக் கோயிலுக்குள்ளே என்ன அற்புதங்கள்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு சந்நிதானம் சின்னச் சின்ன அமைப்புத்தான். ஆனால் கண்கொள்ளாக் கவின் நிறை வண்ண வண்ண வடிவுகள் வழிபட வருபவரை வழிப்படுத்தி விடும் அளவுக்கு இங்கே ஒரு மாயமான லீலை புரிகிறாள் ஆலயத்தின் மகாராணி ஸ்ரீ பத்திர காளி.

சன்னிதானங்கள் அவைகளுக்கு மேலமைந்த விமானங்கள், கலசங்கள், இப்படி எதிலும் குறையில்லாத அளவுக்கு கட்டடம் கலைவண்ணமாக மிளிரும்படி தன் கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர் ஸ்தபதி மகேஸ்வரனும்; அவர் குழுவினரும்.

அழகு பிறந்த இடத்திலேதான் ஆன்மீகம் சிறக்கும் என்பர். அழகான ஆலயத்தில் அன்னை சக்தி அபரிமிதமாகத்தான் பளிச்சிடுகிறது. அழகும் அருளும் நிறைந்த அன்னை ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் தொடங்கியபோது மலர் வெளியிடும் நோக்கம் அன்பர் மனதிலும் எழுந்தது. திருப்பணிச் சபையார் தெளிவான திடமான செயற்பாட்டுடன் ஈடுபட்டனர்.

அன்பர் ஒருவரால் அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட அடியேன் மலர் வெளியீட்டு ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பை ஏற்றேன். திருமஞ்சனத் திருக்குடத் திருமுழுக்காம் மகா கும்பாபிஷேகம் எத்துணை அரிதானதோ, பெரிதானதோ அதேபோன்ற மகத்தான பணிதான் மலர் வெளியீடும்!

தனி ஒருவனுகச் செயற்படல் அரிது. எனவே மலர்க்குழு ஒன்று உருவாகியது. திருவுடையார் P. வல்லிபுரம் அவர்களின் ஆலோசனையின் பேரில் இக்குழு அமைந்தது. அவ்வப்போது ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மலருக்கான கட்டுரைகள், புதிய கவிதைகள், சிந்தனைகள்; ஐதீகப் பாடல்கள்; பஜனை பாடல் சான்றோர் அருட் கவிகள் வரலாற்று அமைப்புகள், விளம்பரங்கள், சான்றோர் அரசியல் பிரமுகர், புரவலர், பொன்னுரைகள் என விடயங்கள் சேர்ந்தன. இவைகளை சீர்தூக்கி திருத்தி நிரல்படுத்தி மலரைக் கட்டுக்கோப்பான - கவர்ச்சியானதாக - பயனுள்ளதாக அறிவுக் கருவூலமாக அமைக்கவேண்டும். அதுவே மலர் வெளியீட்டின் முக்கிய நோக்கம் ஆகும். கும்பாபிஷேகத்தின் ஞாபகார்த்த நினைவுச் சின்னமாக இம்மலர் என்றும்

மக்கள் மனதில் நீங்க வேண்டும் என்ற மற்றொரு நிரந்தர நோக்கமும் எல்லார் மனத்தும் எழுந்தது. இதனை நிறைவேற்றுவதற்கு மலரை அமைக்கும் பணியைத் தொடர்ந்தோம். கும்பாபிஷேகம் எத்தனை அவதானமோ; அத்தனை சிரமமானது மலர் வெளியீடு. இப்பணியைத் திறம்படச் செயல்பட திரு. P. வல்லிபுரம், சங்க அதிகாரி அவர்களின் ஆலோசனையுடன் மலர்க்குழு அமைக்கப்பட்டது.

மலர் வெளியீட்டுக்கான ஒத்துழைப்புகள் பலவழிகளாலும் வந்து சேர்ந்தன. சமயச் சான்றோர் பெருமக்களின் ஆசியுரைகள் பல தேவஸ்தானங்களிலிருந்து வந்தன. இந்து மதத்தின் தலைமை என இன்று போற்றப்படும் காஞ்சி காமகோடி பெரியவரது ஆசிமொழிகள் இம்மலருக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம் என்பேன். கும்பாபிஷேகத்தை நடத்தும் சாமி விஸ்வநாதக்குருக்களது ஆசியுரை நமது மலருக்கு ஒரு முன்மொழிதல் ஆகும். இவ்வாறு ஆன்மீக ஆசிகள் பல இடம்பெறுகின்றன.

அரசியலில் பிரமுகர் வரிசையில் நமது அதி உத்தம ஜனாதிபதியினது இதயபூர்வமான வாழ்த்துச் செய்தியும்; இந்து கலாச்சார அமைச்சரின் ஆசிமொழியும், இத்தொகுதித் தேசிய பேரவை உறுப்பினரது ஆசியுரையும் மலரின் பெருமைக்குக் கட்டியம் கூறுகின்றன.

மேலும்பல, அன்னை பத்ரகாளியின் அடியார்களும் அன்பர்களும் அன்னையின் மலருக்கு ஆசிகள் தந்தனர். அவைகள் யாவும் இம்மலரை அலங்கரிக்கும் அர்ப்பண மாலைகள்.

இம்மலரின் தகுதியும், பெருமையும் மலரின் கவிதை - கட்டுரை ஆகியனவற்றின் தரங்களில் இல்லை. ஏனெனில் இவற்றுள் இடம்பெற்றவை பெரும்பாலும் பக்தர்கள் சிந்தனைதான்.

நம்பியவர் தாம் தாம் அன்னையை நேசித்த அனுபவத்தால் அவரவர் ஆற்றலை அவளருளாலே வெளிப்படுத்தினர். எனவே அறிவுச் செறிவிலும் அன்புச் செறிவே மிகுந்திருக்கின்றது. இவையனைத்தும் தேவியின் திருவருள் விளக்கங்களாகவே அமைந்தன. கற்பனை கடந்த சோதியானவளை; மனத்தாலும் நினைக்க இயலாதவளை; அன்பால் உணர்ந்த அளவுக்கு அவரவர் கண்டு எழுதியது என்றால் கூட மிகையில்லை. எனவே பெரியவர்கள்- அறிஞர்கள்- இதனை அன்னைக்குரிய அன்புக் காணிக்கையாகக் கருதி குறைகளைந்து நிறை விழைந்து வரவேற்றும் வாழ்த்தும் வழங்க வேண்டும் எனவேண்டுகிகிறேன். இதுதான் மலர் ஆசிரியர் என்ற நிலையில் அடியேனால் கூறக்கூடிய சங்கதி என்பேன்.

மலர்க்குழுவில் எம்முடன் ஒத்துழைப்பு வழங்கிய குழுவினர்களில் எல்லார்க்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது என் பொறுப்பான கடமை. சிறப்பாக மலருக்கான ஆலோசனை மட்டுமல்ல அதற்கான காகிதங்களை தந்தது மட்டுமன்றி நிறைந்த விளம்பரங்களையும் தேடித் தந்து எவ்வளவோ செலவினங்களை எல்லாம் ஏற்படாமல் இம்மலரை இலகுவான முறையில் வெளியிட அடியிட்டவர் வல்லிபுரம் ஐயா அவர்கள் தான். அன்னைக்கு முதல் வணக்கமும் நன்றியும் என்றால் அடுத்தது அவர்க்குத்தான்.

என்னுடன் எல்லாவகையிலும் அரும்பணிபுரிந்த ஏனைய மலர்க்குழு அன்பர் யாவருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பரிபாலன சபையாளர்க்கும் அத்துடன் நன்றியைத் தொடர்கின்றேன். ஏனெனில் மலர்க்கு அடிப்படை அவர்களே. மலரின் சகல விடயங்களையும் வழங்கியவருக்கும் மலர்க்குழு சார்பான நன்றியை ஆசிரியன் என்ற முறையில் சமர்ப்பிக்கின்றேன்.

சிறந்த முறையில் அச்சிட்டு, கண்ணைக் கவரும் வண்ணமலராகத் தந்த குமரன் அச்சகத்தினர்க்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். குறுகிய காலத்திலும் பெரிய பணியைச் செய்த அவர்க்கு அன்புநிறைந்த நன்றிகள்.

மலரின் முகப்பு, மனத்திலும் வலைப்பினை ஏற்படுத்தும் அதற்கேற்றவாறு அற்புதமான கற்பனை வளத்துடன், மலரட்டைக்கு அழகு ஓவியம் வரைந்த ஓவியர் திரு. A. நாரயணன். அவர்களை மலரை படிக்கும் யாவரும் மறக்கமாட்டார்கள். ஆதலால் அற்புதக் கலைஞர்க்கும் எமது நன்றி,

எல்லாம் அவளால்தான். இதுதான் நாம் கூறும் ஒரே வார்த்தை. எனவே அன்னைக்கே எல்லா நன்றிகளும் என்று கூறி அவள் திருவடியை வணங்குகிறேன். அடியார்கள். மலரை மனமுவந்து படித்து, அன்னையின் அருளைப்பெற்றுய்வார்களாக- வாழ்க அன்னை திருநாமம் வளர்க அவள் பணி.

இது

அருள்மிகு ஸ்ரீ தேவி

அன்னை

திருவேற்காடு

# கருமாரியின்

எழில் கொஞ்சும் வடிவம்.

---

மஹா கும்பாபிஷேகம் காணும்

ஸ்ரீ பத்திரகாளியின்

மறு தோற்றமே இவள்.

---

மலர் வாங்கும் உங்களுக்கு

இது எங்கள்

# அன்பளிப்பு.

வணங்கிப் பலன் பெறுக.

... பரிபாலன சபை.

*with the best*

*compliments*

*from*

# ANURA DIESEL HOUSE

97, K. CYRIL C. PERERA MAWATHA,
COLOMBO-15.

பிரதம ஸ்தபதி

திரு S. S. மகேஸ்வரனின்

# மனம் நிறைந்த

# வார்த்தைகள்



கலைகளில் சிறந்தது லலிதகலை, கட்டடக் கலையும் அவற்றுள் ஒன்று. ஆலயக் கட்டடக்கலை என்பது நுணுககமும், நுட்பமும், அழகும், வாய்ந்தது. அது தெய்வீக சம்பந்தமானது. ஆதலால் அது தெய்வக் கலை என்றும் போற்றப்படும்.

இளமைக் காலத்திலிருந்தே இக்கலை பயிலும் வாய்ப்பு கிடைத்தது நான் செய்த புண்ணியத்தின் பலனோ? முற்பிறப்பில் செய்த வழிபாட்டின் பலனோ? யானறி யேன். ஆனல் அப்பலன் இல்லையேல் இப் பிறப்பில் கைகூடுமா என்பது சந்தேகந்தான். ஆதலின் முன்னைப் பயனே இது.

''ஒருமையுள் தான் கற்ற கல்வி, ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து''

என்றார் வள்ளுவர். எனது மைத்துனர் மூலம் இந்தக் கலையைக் கற்று தேர்ந்தேன். தேர்ந்தபின் தொழில் முறையில் ஈடுபட்ட பொழுது தான் பிரச்சினைகள் தோன்றின. என்னதான் படித்தாலும், திறமை இருந்தாலும், அறிமுகமும், செல்வாக்கும் சிபார்சும் இருந்தால் தான் இக்கலைத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கக் கூடிய காலமாக இருந்தது அன்று. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் தம்பலகாமம் ஆதி கோண நாயகர் கோயில் திருப்பணி வேலைகளைச் செய்யும் பாக்கியம் கிடைத்தது. எனது குருவான முருகேசு மார்க்கண்டு அவர்களை மானசீகமாக தியானித்துக் கொண்டு தொழிலைத் தொடங்கினேன். குருவினது ஆசியும், கோணநாயகப் பெருமானின் கருணையும் அக்கலை வளரவும், சிறக்கவும் துணைபுரிந்தன. அடுத்தடுத்துக் கோயில் திருப்பணிகள் கிடைக்கத் தொடங்கின. இந்த எனது முதல் திருப்பணியில் என்னாலான சிறந்த கலைத் திறனை வெளிப்படுத்தினேன். அது ஒருவிளம்பரமாகவே அமைந்தது. அதன் பலன் எத்தனையோ ஆலயத் திருப்பணிகளைச் செய்து முடித்துவிட்டேன். இன்றும் தொடர்ந்து செய்கின்றேன்.

உடப்பு வீரபத்திர காளியம்மன் கோயில், பெரியபோரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயம், சம்பூர் பத்திரகாளியம்மன் கோயில், கன்னியா நடேசர் ஆலயம், கைதடி கைசிட்டி கந்தசாமி கோவில், பட்டிமேடு பிள்ளையார் ஆலயம், தெல்கோட்டை மாரியம்மன் கோயில் - இப்படி குறிப்பிடத்தக்க ஆலயங்கள் அடியேனின் கலைப் பணியால் உருவாயின.

திராவிட கட்டட, சிற்பக்கலை முறைகள் மிக வுயர்ந்தவை; நுட்பமானவை. ஆலயக் கட்டுமானத்திற்கு அவையே பொருத்தாமனவை. இக்கலையை நன்கு தெரிந்த பின் அந்த முறை பின்பற்றப்பட வேண்டியதே. கட்டடத்தின் எழிலுக்கும் எடுப்புக் கும் அதுவே காரணம். எனவே இந்த முறையில் எனது தொழிலைத் தொடர்ந்து செய்தேன். காலங் காலமாக புகழ்பெற்ற அம்முறை இக்காலத்தும் மதிப்பும் சிறப்பும் பெறுகின்றது.

இக்காலத்தில் பொறியிலாளர்கள் - திராவிடக் கட்டடக் கலையைச் சரிவர உணராமல், ஆலய அமைப்பு முறைகளை குழப்பி அடிக்கல் பார்ப்பதும் - இன்றைய வேதனையான சம்பவங்களில் ஒன்றுதான். நாம் செய்த திருப்பணிகளில் அதிகமானவை காளியம்மன் ஆலயங்களே. இவ்வாலயங்களில் மறக்க முடியாதவைகளில் உடப்பு வீரபத்திர காளியம்மன், சம்பூர் காளியம்மன், பெரியபோரைதீவு பத்திர காளியம்மன் கோயில்கள் குறிப்பிடத்தக்கவை.

இந்த வரிசையில் மயூரா இடத்தில் கட்டப்பட்ட இந்த ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயம் மேலும் ஒருபடி சிறப்பு வாய்ந்தது என்றால் மிகையாகாது. சிறிய ஆலயமாக அமைந்தாலும் - மிக அழகும், கவர்ச்சியும் கொண்டு காண்பார்க்கும் ஒரு ஆவலை உருவாக்கும் சிலைக் கூடமாகவே காட்சியளிக்கின்றது.

இராச விருட்சம் என்ற அரச மரமும் சக்தி விருட்சம் என்ற வேப்ப மரமும் ஒன்றாக இணைந்த இடத்தில், அவ்விருட்சங்களை வலம் வரும் முறையில் ஏனைய சந்நிதானங்களையும் அமைத்துள்ளோம். ஆகமம், விதிமுறை இங்கு பேண முடியவில்லை. இடவசதியும், பழைய மரபு மீறக்கூடாது என்ற இவ்விடத்துப் பக்தர்கள் மனோ நிலையும்தான் இதற்கு காரணங்கள் ஆயின. எப்படியாயினும் ஆலயம் வழிபாடு செய்யக் கூடிய நல்ல முறையில் அமைந்தது பரம திருப்திதான்.

இக்கோயிலைக் கட்டும் காலத்தில், இவ்வாலய பரிபாலன சபையினர் மனம் நிறைந்த பண்புடன் எமக்கு ஆதரவு தந்து ஊக்குவித்தனர். தலைவர் திரு. E. P. சுப்பிரமணியம், திரு. E. கிருஷ்ணன், திரு. வா. சுரேஸ், திரு. முருகன், உப தலைவர் - புருஷோத்தமன் ஆகியோர் காட்டிய ஆர்வமும், ஆதரவும் என்னால் மறக்க முடியாத நினைவுகள். இவ்வாலயம் வெகு வேகமாக உயர்தற்கு இந்த ஒத்துழைப்பு முக்கிய காரணம் என்பேன்.

இப்பணியில் என்னுடன் ஒத்துழைப்பு நல்கிய எனது சகாக்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. என் எண்ணத்துக்கு எழில் வண்ணம் மூட்டியவர்களே மயூரா இடத்தைச் சேர்ந்த குமார், எமது குழுவில் ஒருவராகி எம்முடன் சேர்ந்து ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

ஒரு மனிதனின் வாழ்வில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால் அவற்றில் ஒன்றிரண்டு தான் மறவாத சாதனை படைக்கின்றன. அப்படியான சாதனை படைத்த வரலாறுதான் இந்த ஆலயத் திருப்பணியும்.

அற்புதமான தலத்தில் எழுந்தருளிய அன்னை ஆதிமாதா, ஸ்ரீ பத்திரகாளி சகல மங்கள வாழ்வுக்கும் ஆதாரம். யாவருக்கும் அவள் வாழ்வளிக்க வேண்டும் என்று பாதார விந்தங்களை பணிவது அல்லால் வேறெதுதான் நம்மால் செய்ய முடியும். இவையாவுக்கும் அடிப்படையாக இருந்து என் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்தவர் திரு. சாளிக் குட்டி சிவசுப்பிரமணியம் - அவர்கள் என்று சொல்லாமல் போனால் நான் நன்றி மறந்தவன் என்ற பழியை தேடியவனாவேன். எனவே அவர்க்கு என் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்வது தான் என் ஆத்ம திருப்தி என்று ஸ்ரீ பத்திர காளியம்மனை வணங்குகிறேன் வாழ்க அன்னை நாமம். வளர்க மயூரா பதி. மக்கள் வாழ்வு.

# அரசமர நிழலில் அற்புதக் காளி

என்னதான் விஞ்ஞானத்தில் முன்னேறினாலும் மனித வாழ்விற்கு இறுதி வழி காட்டி மெஞ்ஞானம் தான என்ற முடிவு உலகம் போகும் போக்கிலிருந்து அனுபவம் கண்ட உண்மை. அதனால்தான் கோவில் இல்லாத ஊரில குடியிருக்க வேண்டாமென்ற கொள்கை கோட்பாடு வாழ்வுக்காதாரமான ஒழுக்க நெறியை வற்புறுத்திய சமுதாயங்களில் தோன்றிற்று.

மனிதனை நல்வழிப்படுத்தலே வழிபாடு. உன்னை நல்வழியில் செலுத்தும் ஒன்றை உணர்ந்து பாடு என்பதற்கான தொனிப் பொருளையும் நாம் காணலாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற கருத்தும் இவ்வடிப்படையிலே எழுந்ததுதான்.

மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் நம்பிக்கையும், நம்பிக்கையால் மனிதற்கு ஏற்பட்ட துணிவும் அதனால் மலர்ந்த நன் மாற்றமும் அவனை உரமான ஆன்மீக வாதியாக மாற்றி விடுகின்றது. அந்த உணர்வே ஆலயத்தையும் தோற்றுவிற்கிறது. வெள்ளவத்தை மயூரு இடத்தில் கொலுவிருக்கும் அருள்மிகு தேவி ஸ்ரீ பத்திரகாளியின் வரலாறும் இந்த வகையிலே அமைந்ததுதான்.

இற்றைக்கு ஒரு தசாப்தத்திற்கு முந்திய காலம்; ஏறக்குறைய ஆயிரத்தி எண்ணூற்றி எண்பதிற்கும், ஆயிரத்தி எண்ணூற்றி தொண்ணூறுக்குமிடைப்பட்ட ஒரு தசாப்த காலம், இன்று கொழும்பு வெள்ளவத்தை மயூரு பதி என்றழைக்கப்படும் பகுதியில் நெசவாலை ஒன்று உருவாகியது. அதனை தனிப்பட்ட நிறுவனத்தார் செய்தனர். எத்தனை பொருள் வளம் இருந்தாலும் அத்தொழில் இலங்கைக்கு புதிய அனுபவம் ஆதலால் அந்நெசவாலையைத் திறம்பட செய்வதற்கான தொழிலாளர் பெருமக்களை தென்னிந்திய மாநிலங்களான தமிழகம், கேரளம், ஆகியனவற்றிலிருந்து வருவித்தனர். அந்த மக்கள் வாழ்வதற்காக குடியிருப்பதற்கான வீடுகள் (தொடர் வீடுகள்) அமைத்துக்கொடுக்கப்பட்டன. ஒரு இடத்தில் பல நூற்றுக்கணக்கான ஒரு இன மத மக்கள் வாழும் போது அவர்களுக்கான ஆதார உணர்வு தலை தூக்குவது இயல்பு. ஆம், அம்மக்கள் தமது பூர்வகால வழிபாட்டை விரும்பினர். அக்குடியிருப்புக்கிடையில் தொடர் வீடுகளில் ஒரு மண்டபம் வழிபாட்டுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அங்குதான் காத்தற் கடவுளாய் திருமாலின் அவதாரமான ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம் ஆரம்பமாயிற்று. ஆலயத்தின் முன் இரு அரச மரங்களுக்கிடையே ஒரு வேப்ப மரம் நின்றது. இம்மரத்தில் ஒரு சூலத்தை நிறுத்தி காளியம்மாளாக வழிபடத் தொடங்கினர்,

முதல் நிறைவு முற்றும் நிறைவு என்பது போல அரம்ப காலத்திலிருந்து நம்பிக்கையுடன் பூஜிக்கப் பெற்ற இவ்வாலய வழிபாடு தெய்வத் திருவருளாலும் நம்பி வழிபடும் அடியார்களது நிறைந்த பண்பாட்டாலும் அன்னை கொலுவிருக்கும் அரச மரம் போல் மேலும் மேலும் உயர்ந்தது.

ஆதி மூலமான நாராயணனும், அவர் தங்கை என கருதப்படும் ஆதி சக்தியான காளியும் அமர்ந்து அற்புதமாக வளர்ந்த இவ்வாலயத்தில் ஆண்டுக்கு ஒரு முறை குளிர்ச்சிக்கஞ்சி வைபவம் சிறப்பாக நடந்து வந்தது. குளிர்ந்த உணவமுதுகளை, கனியமுதங்களை அன்னைக்கு நிவேதித்து கோரமான அவளைச் சாந்தப்படுத்தி, அம்மை, பேதி போன்ற நோய்களில் இருந்து அடியார்களைக் காக்கும்படி வேண்டுதல் செய்வது இவ்வாலயத்தின் அடிப்படை நோக்கமாகும். இவ்வரிய சம்பவம் ஆவணி மாதந்தோறும் நடைபெற்று வரலாயிற்று.

இக்கால கட்டத்தில் நெசவாலையில் உள்ளூர்ப் பெரும்பான்மை இன மக்கள் கணிசமான அளவு சேர்க்கப்பட்டார்கள். இதனுல் ஆரம்ப காலத்தில் கடல் கடந்து தொழிலுக்காக கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள் வந்த வழியே தாயகம் திரும்ப வேண்டிய நிலை உருவாயிற்று. இதனுல் பழைய குடியிருப்புகள் உடைக்கப்பட்டு புதிய இரட்டை மாடி தொடர் வீடுகள் அமைக்கப்பட்டன. மாடி வீட்டில் ஒதுக்கப்பட்ட ஒரு சிறு அறைக்கு ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம் மாற்றப்பட்டது. இவ்வரையில் தொடர்ந்து ஆலயம் இயங்கும்போது திரு. ஏகாம்பரம் கங்காணி அவர்கள் தலைமை தாங்கி வழி நடத்தினர்கள். இதற்குப் பின்னர் திரு. இரத்தின வேலு முதலியார் தலைமையில் பரிபாலனம் தொடர்ந்தது. இவ்விருவர் காலத்துக்குப் பின்னர் வந்த திரு. செப்பிரகாசம் போராயிரம் உடையார் தலைமை தாங்கிய பரிபாலனசபை காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன.

இந்த இளைஞர்கள் பரிபாலன சபையில் இடம் பெறத் தொடங்கினர். இளைஞர்களது வருகை சமயப் பணிக்கும், வளர்ச்சிக்கும் மிக துணை புரிந்தது. இந்த மறுமலர்ச்சிக்குப் பின்னர் சிவராத்திரி விழா வெகு விமரிசையாக ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நிகழலாயிற்று.

இதனைத் தொடர்ந்து சுப்பிரமணியம் தலைமை தாங்கி முன்னவர் பணியில் எத்தகைய குறையுமின்றிச் சிறப்புடன் தொண்டாற்றினர். சிவராத்திரி விழா இவர் காலத்தில் மேலும் சிறந்து விளங்கிற்று.

சிவராத்திரி விழாக்கள்மூலம் ஆலயத்தினை விளக்கப்படுத்தி வந்த சபைக்கு E. P. சுப்பிரமணியம் என்பவர் புதிய தலைவராக வந்து புதிய திருப்பத்தைத் தொடங்கினர்.

1977 இல் வரதராஜப் பெருமாள் ஆலய முன் மண்டபம் அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைபெறுதற்கு இவரது முயற்சி பெரிதும் துணை நின்றது. இந்த மண்டப அமைப்புக்கு பிறகு சிவராத்திரி மேலும் சிறந்த ராத்திரியாக பவனிச்சிட்டது. இந்நியதியான கால கட்டத்தில் தான் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்தது எனலாம்.

பழைய இடத்தில் அரச, வேப்ப மரங்கள் நின்றன. 1980 இல் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டப்பட்டன. வழிபாட்டுக்குரிய இடமாக அரச மரத்தடியில் சிறு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. 4x3 x5½ பிரமாணத்தில் ஒரு மாடம் கட்டப்பட்டது. அந்த மாடத்தில் எதிர்பாராத விதமாக காளியன்னையின் சூலமிருந்த இடத்தில் வேறொன்றுக்குரிய சூழ்நிலைகள் தென்பட்டன. ஆனல், அருள்மிகு அன்னை அடியார் மனதில் பெருந்துணிவுக்குத் துணையானல், இரவோடு இரவாக அருள்மிகு அன்னை அடிசடியில் தரிசனம் தந்தால், முதல் அமர்ந்த அவளை, பின்னர் வந்த எதனுலும் மாற்ற முடியவில்லை. சூலத்தில் சூக்குமமாகி நின்றவள் சிலையால் அருளாகி அமர்ந்தாள். இந்த புதிய சிலாசனம் பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கு மூலக்காரணமாகவும், பெருந்துணையாகவும், செயற்பட்ட பெருமை தலைவர் E. P. சுப்பிரமணியத்திற்கும் அவர் தலைமையில் இயங்கிய பரிபாலன சபைக்கும் உரியது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்பாளுக்கு, கும்பாபிஷேகமும், தொடர்ந்து ஒரு மண்டல காலத்திற்கான 48 நாட்கள் மண்டாலபிஷேகமும் நடைபெற்றது. மண்டாலபிஷேக பூர்த்தித் தினத்தன்று, சகஸ்ரசங்காபிஷேகமும் நடைபெற்றது. அன்று அன்னை சர்வாலங்கார பூஜிதையாக வெளி உலாவும் இனிதுப்போந்தாள். வேப்படி வித்தகியாக இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கிய பத்திரகாளி, நாடி வருவோரைத் தேடி வருபவள் என்பது பொய்யாகுமா ? அவள் புறம் புறம் திரிந்த தெய்வமல்லவா ! பத்திரமென்றால் மங்களம் மனமுருகி வழிபடுவர்க்கெல்லாம் மங்கள குங்கும வாழ்வளிக்கும் தேவி இவள். 83ம் ஆண்டு நாட்டிலேற்பட்ட நடக்கக் கூடாத அசம்பாவிதத்திலும் கூட, அணுவும் பங்கமின்றி இவ்வாலயம் மிளிர்ந்ததென்றால், அவளின் அருளுக்கு ஈடு செய்ய முடியுமா ? கல

வரத்தின் பின்னர் சைவாலயங்கள் ஸ்தம்பித்த நிலையில் இருந்ததை யாவருமறிவர். இந்த சந்தர்ப்பத்தில் ஆலயம் தவறான பாதையில் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. தர்மத்தின் காவல் தெய்வமான காளி இதனை பொறுத்துக் கொண்டிருப்பாளா? அடியவா உள்ளம் எல்லாம் புகுந்தாள்; தன் ஆலய நிலைமையை உணர வைத்தாள்; சிதறுண்டு கிடந்த அமைப்பை ஒன்றாக்கினாள். அவள் அருளாலே அவள் தாள் வணங்கப் பெற்ற உறுதியில் தோய்ந்து நின்ற பரிபாலனசபை, துடிப்புப் பெறலாயிற்று. தூய பணி தொடங்கிற்று. எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் தடைகளையறுத்து ஆலய உரிமையையும் உடமைகளையும் மீட்டு பரிபாலன தத்துவத்தையும் பெற்று புதிதான ஆலயம் அமைக்க வேண்டுமென்ற உத்வேக உணர்வுக்குள் புகுந்தது. பரிபாலனசபை மரத்தடிக் கோயிலை மணி மண்டபக் கோயிலாகக்கட்டி எழுப்பத் திருப்பணிச் சபையும் உருவாகிற்று.

ஆலயம் அமைவது சம்பந்தமான ஆலோசனைகள் ஆன்மீக அநுபூதி மான்களிடமிருந்து பெறப்பட்டன. ஆகமம் அறநிலம் இருந்தாலும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பது போல, ஆலயம் அமைவது தான் அவள் பார்த்த பார்வையின் முடிவாயிற்று. ஆரம்ப காலத்தில் எங்கு நோக்கிய தரிசனம் தந்தாளோ, அந்த முறையிலே நவீன ஆலயம் உருவாயிற்று. இவ்வேளையில், இரட்டை மாடியின் கீழ் அறையில் இயங்கி வந்த வரதராஜப் பெருமாள், ஆலயத்திலிருந்து பிள்ளையார், லிங்கம், வேலாயுதம், மூர்த்திகளும் இப்புதிய ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டனர். 1987-03-22ம் நாள் அம்மனுக்கு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கோயிலைக் கட்டிப்பார் என்பது பொருள் பதிந்த ஓர் தத்துவம். அவ்வரிய பணியைத் தொடுவதும், இடையீடு இன்றி தொடர்வதும், மிகமிகக் கஷ்டம். தெய்வ சித்தமிருந்தால் எதுவும் நடக்கும். அன்னை தொட வைத்தாள். தொடரவும் வைத்தாள். நிதி நெருக்கடியான நிலைமையிலும் திருப்பணி அவள் அருளால் தொடர்ந்தது. இந்துக்களுக்கே சொந்தமான அன்னை காளியின் ஆலயத்திற்கு, ஏனைய மதத்தவரும் பந்தபாசம் கொண்டனர். சர்வமத, இன, மொழி மக்களும் பொருள் வழியாலும் செயல் உதவியாலும் திருப்பணியில் பங்கேற்றனர்.

ஸ்ரீ பத்திரகாளி, விக்னேஸ்வரன், சிவன், நாகதம்பிரான், புராதன அம்பாள், நாகதம்பிரான், நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு மூர்த்தத்திற்கும் ஒவ்வொரு அடியார்கள் இப்பணியைச் செய்தார்கள். குறிப்பிடத்தக்க சிறிய இடத்திலே எல்லா மூர்த்தி சன்னிதானங்களையும், ஆகமப்படி அமைப்பது மிகவும் சிரமமாய் இருந்தது. அவ்விடத்திலுள்ள மக்களுக்கு இந்து ஆலயங்கள் குறிப்பிடத்தக்க தூரத்தில் இருந்தபடியால் எல்லாத் தெய்வங்களையும் இவ்வாலயத்தில் வைத்து வழிபட முடிவு செய்தார்கள். ஆகமம் பிரமாணம் என்பனவற்றிலும் பார்க்க அடியாரின் உண்மை அன்பு தான் மேலானது. ஆதலால் அரசமரத்தைச் சுற்றி சன்னிதானங்கள் அமைந்தன.

ஆலயத்தை நிர்மாணிக்கும் எண்ணம் எழுந்ததும் எண்ணப்படி கட்டி முடிப்பதற்கு கட்டிட கலைஞர்களின் பணிதான் பெரிதும் அவசியம். ஆலயக் கட்டடக்கலையில் மிகச்சிறப்புறும் கலைஞராக பிரசித்தி பெற்று விளங்கும், அராலியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வந்தாறுமூலையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. எஸ். எஸ். மகேஸ்வரன் ஸ்தபதியாரும், அவரது குழுவினரும் அப்பணியை மேற்கொண்டனர். அவர்கள் கைவண்ணத்தில் கலை வண்ணமாக எழுந்தது ஆலயம்.

தென்கிழக்கு நோக்கிய மூல மூர்த்தியாக ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கொலுவிருந்தாள். அம்மன் சன்னிதானத்தின் பின்புறமாகப் புராதன அரசமரம். அம்மரத்தை சுற்றி வட்டமான பீடக்கட்டு. சந்திர வட்டக்குடை போல அரசமரம் நிழலோச்சி நிற்கின்றது. அரசமரத்தின் உள்ளடக்கி சதுரமாக அமைந்துள்ளது ஆலயம். அன்னையின் வலப்புறம் ஆனைமுகனும், இடப்புறம் முருகனும் அமர்ந்தனர். விநாயகருக்கு முன்னதாக அலங்கார

சொரூபியாக கதை வண்ணத்தில் மூலையின் பக்கொரு சன்னிதானம் அமைந்துள்ளது. இந்த அப்பனுக்கும், விநாயகருக்குமிடையில் வலப்புறமாகத் தலவிருட்சத்தை வலம் வரத் தொடங்கினாள். முதல் தரிசனம் புராதன அப்பன். அதனையடுத்து திருமால் அனந்த சயனம். சயனதரிசனத்தைக் கண்டுவிட்டு கீழ் இறங்குமிடத்தில் வலப்பக்கமாக நாகதம்பிரானும், இடதுபக்கமாக வடகிழக்கு மூலையில் சிவலிங்கப் பெருமானும் தரிசனமளிப்பர். அப்படியே அன்னை சன்னிதானத்தை நோக்கி வரும்போது, இடதுபக்கமாக நவகோள் அதிபரும், எதிரே தென் மூலையில் க்ஷேத்திரபாலகராகிய வைரவரும் காட்சி தருவர்.

இவ்வாறு அமைந்த ஆலயத்திற்கு விமானம் அமைக்கக் கூடிய வாய்ப்புகளில்லை. அரசமரத்தின் தளைத்த கொம்பர்களே விமானம் போல விசாலித்து நிற்கின்றது.

பாலஸ்தாபனத்தின் போதே தீர்மானிக்கப்பட்டபடி ஆலயத்தின் சன்னிதானங்கள் கட்டப்பட்டுள்ளன. கட்டுமான வேலைகள் ஓரளவு பூர்த்தியாக மகா கும்பாபிஷேகத்திற்குரிய காலத்தை நெருங்கியது கோயிற் திருப்பணி. இவ்வேளை தான் பொருளாதாரத்தில் மிக மிக நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் நம்பியவர்களுக்கு துணையான அந்த நாயகி திருப்பணி சபைக்கு நல்லதொரு தலைமையைக் காட்டி விட்டாள். உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைவதாம் நட்பு என்ற குறளோவியத்தின் கருவூலமாக, கை கொடுத்து உதவ வந்தார் ''ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திருவுடையார்'' அன்னையின் அடியவராக அரும் பணிச் செல்வர். சிவதர்மச் சிந்தனையாளர் சிவத்திரு. பொ. வல்லிபுரம் அவர்கள்.

அகில இலங்கை சுங்க அதிகாரியாகக் கடமை புரியும் இவர், பட்டம், பதவி, புகழ் செல்வம் இத்தனைக்கும் பக்தியில் அன்னை விசுவாசி ஆகி, அவள் பணியே யாவிலும் மேலானது என நினைத்து, நிறைந்த பொருள் உதவியும், தகுந்த ஆலோசனையும் வழங்கி வருவது, நமக்கு கிடைத்த பெரும் பாக்கியம். யாரைக் கொண்டு தன் பணியை பூர்த்தி செய்யவேண்டுமென அன்னை நினைத்தாளோ, அவரிடமே அப்பணியை ஒப்படைத்து விட்டாள் எனவும் கூறலாம், இடைக்கால நிர்வாகத்திற்கும் புதிய திருப்பணிச் சபைக்குமிடையில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமலிருந்த ஒரு சிக்கல் வல்லிபுரம் அவர்களது வருகையினால் தீர்த்து வைக்கப்பட்டது. அவருடைய தயாள குணத்தையும் தூய பக்தியையும் உணர்ந்த திருப்பணி சபை கும்பாபிஷேகத்தை நடத்தும் முதன்மைத்துவத்தை அவருக்கே கொடுத்து அவர் வழிச்சென்றது. அந்தப் பெரும் பொறுப்பை உணர்ந்த பெருமகனும் அல்லும் பகலும் ஈடுபடலானார்.

அதே போலதான் ஆலய கட்டுமானத்தின் போது அடிக்கடி ஏற்படும் பிரச்சினையில் எல்லாம் அரசின் ஆதரவு தேவைப்பட்டது. அச்சந்தர்ப்பங்களில் மிகவும் கரிசனையுடன் ஒத்துழைப்பு நல்கி திருப்பணி இனிது வேகமுறத் துணைபுரிந்தவர், இப்பகுதியின் தேசியப் பேரவை உறுப்பினரும், உதவிப்பாதுகாப்பு அமைச்சருமான அநுரா பஸ்தியான் அவர்கள். சாதிமத பேதமற்ற அவர் செயல் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணை. புத்தம் புதிய ஆலயமாக அமையும் இவ்வாலயத்தில் பல புதிய நூதன மூர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. நவீன மூர்த்தங்களாகிய அன்னை பதி பத்திரகாளி, முருகன், நாகதம்பிரான் ஆகியன தமிழ்நாட்டில் சிற்பக்கலை வளர்ந்த மாமல்லபுரத்து சிற்பக்கலைக் கூடத்தில் பயிற்சி பெற்ற சிற்பிகளின் கைவண்ணத்தில் உருவான கலை வண்ணங்களாம். இச்சிலைகளை திருப்பணிச்சபை செய்தாலும் அவைகளை இங்கு கொண்டுவந்து சேர்க்கும் பயணப்பணியை இந்து கலாச்சார அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கள் தம் அமைச்சிற்கே உரிய பணியாக சிறப்புடன் செய்வித்தார். கலாசார அமைச்சு இலவசமாகவே இச்சிலைகளை வருவித்து தந்தமை பெரிதும் உதவியாயிட்டு. நவக்கிரகம் இலங்கை வவுனியா சிற்பிகளினால் உருவாக்கப் பெற்றது.

கட்டுமானத்திற்கு பசேன்ரென் ஸ்தபதியோடு துணைநின்ற வி. இராசையா அவர்களினது உதவி பெரிது. இவ்வாலயத்தின் பொம்மைகள் தேவனின் கைவண்ணத்தில் உரு

வாகின. எந்தப் பொருளிற்கும் அங்கங்கள் பொருத்தமாக அமைய வேண்டும். அப்படி அமைந்தால் அப்பொருள் பூரண வடிவம் பெறுகிறது. கட்டுமானக் கல்லும், பொம்மைகளாகிய சுதைக் கல்லும் சரியாக அமைந்தால் ஆலயத்தின் கல்லவண்ணம் கண் கொள்ளாக் காட்சியாகவே அமையும். திரு. பி. தேவனின் சுதைகள் அந்த அளவுக்கு பங்களிப்பைச் செய்துள்ளன.

ஆலயத்தின் வண்ணந்தீட்டும் பணியையும் மகேஸ்வரன் ஸ்தபதியின் மேலாண்மையில் அராலி திரு. குணம் குழுவினர் செய்தனர். ஒட்டு மொத்தமாக அன்னையின் ஆலயம் முழுமை பெற்று எழுந்தது. பரிபூரணத்துவம் என்பது கட்டு எழுப்பப் பெற்ற ஆலயத்தின் மகா கும்பாபிஷேகந்தான்.

கும்பாபிஷேகத்தினைச் செய்யும் போது ஏற்படும் சிறு தடைகள், மனித மனதிலே சலிப்பையும் ஏற்படுத்தும். அந்தச் சலிப்புக்கெல்லாம் மருந்தாக அமைந்து நிதியுதவி அளித்த பெருந்தகையாளர் தயாள குணம். சென்ற இடமெலாம் தம் இயல்புக்கு ஏற்ப மனமுவந்து நிதி அளித்தவர்களது திருநாமங்களை விரிவு கருதிக் குறிப்பிடவில்லை. எனினும் நிதி அளிக்கையில் அவர்கள் திருப் பெயர்கள் இடம் பெற்றே ஆகும். ஆயினும், அன்னை திருப்பணிக்குத்தம் மனமுவந்து நிதி வழங்கிய அனைவருக்கும் பரிபாலன சபை அன்னை சார்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பிரபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 9ம் நாள் 1987 நவம்பர் புதன்கிழமை பூர்வ பட்ச பஞ்சமித்திதியும், உத்தராட நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் குருஹோரையும், ராஜ குண வேளையும், கூடிய காலை 8 மணிமுதல் 9 மணி 49 நிமிடம் வரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்தத்தில் அன்னைக்கு கும்பாபிஷேக விழா இனிது நிகழ்வுறுகின்றது. கும்பாபிஷேகங்கள் செய்தே புகழ் பெற்றவரும், சக்தி உபாசகிபாகவுள்ளவரும், அந்தணர் பெருந்தகையாளருமாகிய பிரதிஷ்டா சிரோமணி, கிரியா கிரம ஜோதி பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அன்னையின் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க எதிர்பாராமல் வந்து சேர்ந்தார்கள். தெய்வீக சந்நித்தியங்களை ஏற்படுத்தும் இப்பெருமகனை அழைத்தமை அன்னையின் அற்புதமென்றே சொல்ல வேண்டும். அவர்களுடன் மற்றும் சிவாச்சாரியார்களும் இணைந்து நடத்தி வைப்பது பெருமை தருவதாகும்.

இத்திருக்குட முழுக்கு விழாவிற்கு இலங்கைத் திருநாட்டின் அதி உத்தம ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களும், அமைச்சர்களும், தேசியப் பேரவை உறுப்பினர்களும் கனித்த ஆசியுரைகளை வழங்கியுள்ளார்கள்.

தமிழகத்திலிருந்து "காஞ்சிப் பெரியவர்" காமாட்சிதாசர், ஆசி வழங்கிச் சிறப்பித்ததே வரலாற்றுச் சிறப்பான நிகழ்ச்சியாகும்.

மேலும், இவ்விழாவினைக் காண, அரசியல் சமூக வர்த்தக சமயப் பெரியார்களும் கூடியது மட்டுமன்றி மத-இன, மொழி பேதமற்ற நிலையில் யாவரும் ஆயிரமாயிரவாகக் கூடி விழாவைக் கண்டு களிப்பதுடன், ஸ்ரீ பத்ர காளியின் பேரருள் பெற்று சமாதான சமத்துவ வாழ்வும், சகல செல்வங்களும் பெற்றுத் திகழ்வதில் யாதும் தடையில்லை.

அவளே நினைத்தாள்! அடியார் உளமெலாம் புகுந்தாள்; ஆலயம் அமைத்தாள்; அற்புத சக்தியாகி, திருக்குடத் திருமஞ்சனத் திருமுழுக்கும் பெற்றாள்; தினம் தினம் காட்சி தருகிறாள்.

அவளே நம் துணை: வணங்கி நலம் பெறுவோம்.
வாழ்க அன்னை ஸ்ரீ பத்ர காளி

ஆசிரியர்
தகவல்: பரிபாலனசபை

# Compliments

from

# Nihila Garments Ltd.

775/1 MABOLA
WATTALA.

Tel :— 22501, 549654

# ஐதீகப் பாடல்கள்

ஈழத்தில் புகழ்பெற்ற காளி அம்மன் ஆலயங்களில் மரபு முறையான ஐதிகப் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. இவை அம்மனின் அருள் கடாட்சத்தினை வெளிப்படுத்தும் உணர்ச்சிமயமான இசைகள். இவ்வம்மனுக்கும் இத்தகைய இசைப்பாடல்கள் அமைய வேண்டும் என்பது மயூரா இடம் வாழும் அன்னை அடியார்களது அந்தரங்க சுத்தியான ஆசைகள். ஆசைகளின் கோவைகள் உள்ளே!

''திரட்டு''
மலர் ஆசிரியர்

# திருப் பொன்னூஞ்சல் பதிகம் !

பிறந்தவுடன் நாம் கேட்கும் முதல் இசை தாலாட்டு - பின்னர் வண்ணத் தொட்டிலில் இசை. தொடர்ந்தால் திருமணத்தில் ஊஞ்சல். உலகெலாம் போற்றும் அன்னையை அவள் உள்ளம் மகிழ - ஊஞ்சலிட்டு - ஆட்டிப் பாடுகிறோம். ஆனந்தமாக அன்னை ஆடி மகிழ்வதாக நம்பிக்கை ஐதீகம். அவள் மகிழ்ச்சிதானே நம் வாழ்வின் மலர்ச்சி. அண்டத்தில் ஊழிக் கூத்தாடும் காளி - இந்த ஊஞ்சலிலும் ஆடாமல் இருப்பாளோ?

(காப்பு)

1. இந்துமா கடல்ஓரம் இலங்கிடும் கொழும்புநகர்
வெள்ளவத்தை மயூரபதி வீற்றிருந்து
வந்துமலர் அடிதொழுவார் வறுமை பிணி சிறுமையிடர்
மாற்றிநல் வாழ்வளிக்கும் பத்திரகாளி
அந்தமாய் ஆடுகின்ற அழகுமலர் பொன்னூஞ்சல்
அநுபூதி அடியனிவன் இனிதுபாட
கந்தனுக்கு மூத்தமாக கணபதியின் பாதமதை
கைதொழுது வணங்குகிறோம் காப்பதாமே

ஊஞ்சல்

2. ஆதிமூலப் பழம்பொருளே ஆனந்தமான அம்மா காளி
அந்தரத்தில் அற்புதமாய் எழுந்த தேவி
சோதிமய வடிவான சுடராகி சிற்பரத்தில்
சுடர்முகமும் படர்கரமும் தொடாகரமும்
தசாபயமாய் காட்சிதந்து பிரமனவன் கவலைபோக்கி
திருமாலின் உடலினிலே துர்க்கையானாய்
ஆதரவாய் கொழும்புநகர் வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்தபத்திர காளியம்மா ஆடிர் ஊஞ்சல்

3. கங்கைநதி மீதினிலே கனிவுடனே நடந்து வந்தாய்
கௌரியெனும் திருநாமம் பூண்டுவந்தாய்
மங்களமாய் தேவருக்கு காட்சிதந்தே மாதாநீ
மாயமான கௌசிகியாய் மறைந்து நின்று
திங்கடையார் சண்டமுண்டர் அசுரர்தமை மாய்த்து நின்று
சண்டிமுண்டி சாமுண்டி ஆனதேவி
எங்கள்குலம் காப்பதற்கு வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்தபத்திர காளியம்மா ஆடிர் ஊஞ்சல்

4. வேதங்கள் நான்கினுமே கால்களாக விழுந்தமெழில்
சாக்தமத தத்துவமே விட்டமாக
ஆதியான சங்கிதைகள் அர்த்தமுள்ள வடங்களாக
அரும்பஞ்ச அட்சரமே பீடமாக
மாதர்குல குரவையொலி மங்களமாம் பாடலாக
மனங்குளிரும் குளிர்ச்சியது பாணமாக
கோதமுடன ஆளும்தேவி வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்த பத்திரகாளி அம்மா ஆடிர் ஊஞ்சல்

5. நீலமய திருமேனி நிமலியாட நாகராஜன்
நிலைபடையாய் நின்பணியில் நின்றாட
கோலமுடன் திரிசூலம் கையில்ஆட அசுரர்தலை
கொடிபோலத் தோள்மீது தொங்கி ஆட
சீலமுறும் இடையதனில் அசுரர்கர சிங்காரச்
சிற்றுடை சிணுங்குநின்று அசைந்துஆட
காலமெலாம் காப்பதற்கு வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்த பத்திர காளிஅம்மா ஆடிர் ஊஞ்சல்

அரன்ஆட ஆதிசக்தி உமையாட அயனுமாட
அண்ட சரா சரமனைத்தும் அருளால் ஆட
சுரர்ஆட சுடராட மதியுமாட சுத்தவித்தியா
தத்துவங்கள் பாடிஅரம் பையருமாட
வரமீனும் அபயமொடு வரதகரம் தாமுமாட
மரைசடை யும் வாழ்த்தொலித்து திரைகளாடா
புரமான கொழும்புநகர் வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்த பத்திர காளிஅம்மா ஆடிர் ஊஞ்சல்

7. சங்கணை நூக்காட்டன் கண்ணம்மின்ன கனிருப்பும்
உடுக்கையொலி காதில் மின்ன கத்தியேந்தி
துங்கபணிப் பணிகளது ஒளிதவழுய மூன்று வண்ணம்
சூலகபா லமுடன்வாழும் தோளுமின்ன
செங்கைகுவித் தடியவர்கள் சிரம்பணிந்து உன்னைவேண்ட
சிங்கவா கனமேவும் தேவதேவி
எங்களடதி கொழும்புநகர் வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்த பத்திர காளிஅம்மா ஆடிர் ஊஞ்சல்!

8. வெள்ளரசு நடுநின்ற வேம்பினிலே மறைந்து வாழ்ந்து
வித்தகமாய கூடமதில் அருள்பலித்து
சொல்லேழுதல் கொடுநோயும் கொஞ்சமுமே நாடாமல்
கொலுவிருந்து காப்பதற்கே வந்தகாளி
அள்ளிவத்த அருள்நீரில் மாவிளக்கு ஏற்றிவைத்து
அற்புதமாய் வேப்பிலையில் வினையுந்தீர்த்த
தெள்ளமுதே கொழும்புநகர் வெள்வத்தை மயூரபதி
அமர்ந்தபத்திர காளியம்மா ஆடிர்ஊஞ்சல்

9. பஞ்சனிலே நீராடி சுவீக்கட்காளி மலடுபிணி
மாயமெல்லாம் தீர்க்கின்ற மாதாகாளி
கொஞ்சமுமே அஞ்சாதா மகிஷன்தன்னை மாய்த்தகாளி
கொலுவினிலே நவராத்திரி நாயகியே
தஞ்சமென வருவார்க்கு தாய்போல தயவுகாட்டி
தளராத கனதனமும் மனமும்தந்து
அஞ்சலென அபயம்தந்து வெள்வத்தை மயூரபதி
அமர்ந்பத்திர காளியம்மா ஆடிர் ஊஞ்சல்

10. ஆரணியே காரணியே ஆடிர் ஊஞ்சல்
அந்தரிநற் சௌந்தரியே ஆடிர் ஊஞ்சல்
பூரணியே நாரணியே ஆடிர் ஊஞ்சல்
பக்திமுக்தி அருள்பவளே ஆடிர் ஊஞ்சல்
ஏரணியே தாரிணியே ஆடிர் ஊஞ்சல்
இனிமைதரும் உமைபவனே ஆடிர் ஊஞ்சல்
சீரணியூர் வெள்ளவத்தை மயூரபதி
அமர்ந்தபத்திர காளியம்மா ஆடிர் ஊஞ்சல்

11. அத்துவிதம் கடந்தவளே வாழி வாழி
ஆனந்த நாரணியே வாழி வாழி
வித்தகத்தின் உத்தமியே வாழி வாழி
வெண்ணெய்க் கண்ணன் சோதரியே வாழி வாழி
சித்தமுடன் உனைவணங்கும் அடியர் வாழி
சிறப்புமிகு மயூரபதி நலமாய் வாழி
பக்திமிகு மங்கையர்கள் குங்குமம் வாழி
பாரெங் கும்மங்களமாய் வாழி வாழி

# நாக தோசங்கள் தீர்க்கும் நாகேஸ்வரர்

இந்திய நாகரிகம் இந்து மதத்தின் அடிப்படையில் உருவாகியது. ஆதி திராவிடர் வழிபாட்டில் நாக வழிபாடு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இயக்கர் நாகர் என்ற பிரிவுகள் வழிபாட்டின் அடிப்படையில் வந்தனவாகவே கருதப்படுகின்றன. நாக வழிபாடு பாரம்பரியமாகவே இந்து மதத்துடன் சம்பந்தமுடையது.

காத்தற் கடவுள் நாராயணர்க்கு ஆதிசேடன், சயனப்படுக்கையாக குடையாக இருக்கின்றான். சிவனுக்கு சமுதத்தில் நாகம் ஆபரணமாயிற்று. அன்னை கருமாரிக்கு கிரீடக் குடையாகவுளது. சிவன், காளி, மாரி, மூர்த்தங்களில் டமருகமுடன் நாகம் இணைந்து காணப்படுகின்றது.

இராமாவதாரத்தில் இலக்குமணனாக ஆதிசேடன் பிறந்தான். கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாக வந்தவனும் ஆதிசேடன்தான். இப்படி நாகத்தின் சிறப்பு இணைந்து காணப்படுகின்றது.

காளி, மாரி அம்மன்களின் படையாகி நாகங்கள் அமைந்தன. ஆதலால் காளி அம்மனை நாகப் படையாச்சி என்பர்.

நாகங்கள் வழிபாடு செய்தபடியால்தான் நாகபூசணி அம்மன் என்ற திருநாமம் நயினை அன்னைக்கு ஏற்பட்டது.

நவக்கிரகங்களில் நாகங்கள் வடிவமானவர் இருவர். பாம்பு இரண்டு என்பது சம்பந்தர் தேவாரம்.

மனித உடலும் நாகத் தலையும் உடையவர் இராகு. மனிதத் தலையும் பாம்புடலும் கொண்டவர் கேது. கேது பூசித்த தலம் கேதீஸ்வரம் என்பர்.

நாகங்களில் பெரியது ஆதிசேடன். ஆயிரம் தலையுடவன் என்பர். அனந்தன் - வாசுகி தட்சகன் - கார்க்கோடகன் - சங்கபாலன் - குளிகன் - பத்மன் - மகாபத்மன் எனும் அட்ட நாக சூரர்கள் ஒன்று சேர்ந்து தமது ஜென்ம பாவங்கள் தீரவே ஆதிசேடன் ஆகிப் பெருமானுக்குப் படுக்கையும் குடையுமாயினர். குளிகன், பத்மன், மகா பத்மன் ஆகிய மூவரும் உடலாகவும், ஏனைய ஐந்து பேரும் ஐந்து தலைகளாகவும் மாறினர். இதுவே ஆதிசேடன்.

ஆதிசேடனில் படத்தைக் குடையாகவும், அதன் உடம்பு - முப்புரியாக வலவளமாக - சுருட்டிய வட்ட வடிவினை பீடமாகக் கொண்டு - சிவனுக்கும் ஸ்ரீமந்த நாராயணனுக்கும் - ஆசனமமைப்பது - ஆதிசேடனின் தொண்டாகும்.

ஆதிசேடனின் படம் குடையாக அமைய முப்புரியான ஆசனத்திலும், சிவலிங்கப் பெருமானின் உருவத்தை அமைத்து வழிபடுவது சைவாகம மரபு. நாகமும் - ஈஸ்வரனும் ஒன்றான மூர்த்தமாகக் காணப்படுவதால் நாக - ஈஸ்வரன் நாகேஸ்வரன் என்னும் திருப்பெயர் தோன்றியது. பின் கால வழக்கிலே நாகதப்பிரான் என அழைக்கப்பட்டார்.

சிவலிங்கம், பிரம்ம, விஷ்ணு, ருத்திர பாகங்களாக அமைந்தது போல, நாகேஸ்வரர் உடலால் ஏற்படுத்திய முப்புரியாக வளைந்த பகுதிகள் பிரம்ம விஷ்ணு - ருத்திர வடிவினையே ஏற்படுத்தும்!

இயல்பாகவே சர்ப்பங்கள் தோசம் மிக்கவை. நவக்கிரக பிரிவில் இராகு கேது என்பவர் மிகுந்த தோசம் மிக்கவர் என்பது சோதிட ரீதியாகச் சொல்லப்படுகின்றது. இவர்களது தோச நீக்கம், ஈஸ்வரனை வழிபாட்டாலும் அவர்களுக்குப் பிரீதி செய்வதாலும் தான் நடக்கக் கூடியது. தமது பாவங்களுக்காக ஈஸ்வரனைத் தாங்கி நிற்கும் நாகேஸ்வரரை வழிபடும்

போது ஈஸ்வர வல்லமையால் நாகத்தின் தோசம் நீங்குவது மட்டுமல்ல, அந் நாகேஸ்வரர் தாமும் ஈஸ்வர சம்பந்தத்தால் சாந்த சொரூபியாகிய அடியார்க்கு அருள் பாலிக்கின்றார். சர்ப்ப தோசங்கள் நீக்கத்திற்கு நாகேஸ்வரர் வழிபாடே தலையானது.

சைவ மரபில் லிங்கப் பெருமான் நாகேஸ்வரராகி காட்சி தருவது போல் இந் நாக ராஜனாகிய அதிசேடனில் - ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் காளிங்க நர்த்தன மூர்த்தியாகவும், ஆலிலைக் குழந்தை யாகவும் - அமர்ந்திருப்பது உண்டு. இது வைணவாகம மரபு. இவர் சந்தான கோபாலர் என்றழைக்கப்படுகிறார். சர்ப்ப தோசங்களால் புத்திர பாக்கிய சந்தான மில்லர் சந்தான கோபாலரை வணங்கி தோசம் நீங்கி- புத்திரப் பேறு பெறுவர்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தி கனது ஒம் அவதாரமாகிய, கிருஷ்ணவதாரத்தில் காளிங்கன் தலைமேல் நின்று நடனமாடிய சிவனாகவும் காட்சி தந்தனர். சாப நீக்கம் பெறு வதற்காக காளிங்க மடுவில் தேவன் ஒருவனே காளிங்க நாகமாகிக் கிடந்தான். கிருஷ்ண னின் திருவடி தீட்சையால் தன் பாவம் நீங்கும் காலம் வரை பொறுத்து, அப்பாக்கியம் பெற்றான். சர்ப்ப சயனருக்கு சர்ப்ப தோசம் மிகவும் அஞ்சும்.

கம்சனின் கொடுமைக்கு மத்தியில் தெய்வ லீலையுடன் பிறந்தார் நாராயணர். அதே போல பல்வேறு கொடுமைகளை எதிர்த்து, வென்று ஆயர் பாடியில் வளர்ந்தார். ஆதலால் குழந்தைகளில் அழிக்கப்பட முடியாத அவதாரப் பிள்ளை அவர். ஆகவே தான் கருவில் உரு வான காலந் தொட்டு, பிறந்து வளர்ந்து ஆளாகும் காலம் வரையும் எவ்வித இடர்பாடு மின்றிப் பிள்ளை வளரவேண்டும் என்ற நீண்ட போக்கிற்காகவே சந்தான மருளவல்ல சந் தான கோபாலரை வணங்கிப் பலன்பெறுவர்.

ஒரே நாகவடிவிலும், இரு நாகங்கள் சேர்ந்த வடிவிலும் இவ் விக்கிரகம் காணப்படுகி றது. ஒரே நாகத்தில் முப்புரியாக பீடம் அமைந்துள்ளது. இரு நாகங்கள் வாலிரண்டை யும் ஊன்றி இரண்டும் மாறி மாறி பின்னி மூன்று வட்டங்களை தோற்றுவித்து மூன்றும் வட்டத்தில் தலைகளால் ஒன்றான குடை அமைத்துக் காணப்படுகின்றன. அடி வட்டம் பிரம்ம பாகம்- படைத்தல்- நடு வட்டம், விஸ்னு பாகம்- காத்தல், மேல் வட்டம் ருத்திர பாகம் அழித்தல்- மறைத்தல்- அருளல்- ஆதிய ஐந் தொழிலையும காட்டுகின்றது.

பிராணனாகிய ஆன்மாவில் கலந்தவன் இறைவன். ஆதலால்- பிரான்- என்பர் தம்பி ரான் எம்பிரான், தம்பிரான் என்றுல் பேசும் மரபு எங்கும் உண்டு. பிராணனாகிய சிவன் நாகத்தில் இருப்பதால் நாகத்தில் வாழும் பிரான் நாக தம்பிரான் என்ற தத்துவமாகக் காலப் போக்கில் இப் பெயர் தோன்றியது. சிவாலயங்களில் நாக தப்பிரான் என்றும் வைஷ்ண ஆலயங்களில் சந்தான கோபாலர் என்றும், இன்று விதமான வழிபாடுகள் காணப் படுகின்றன.

வேம்பும் அரசும் சிவசக்தி வடிவங்கள் அரசினை சிவனாகவும், வேம்பினைச் சக்தியாக வும் கொள்வர். சக்தியாகிய ஆதி சக்தியுடன் சம்பந்தமுடையவர் ஸ்ரீமந் நாராயணர். ஆத லால் சக்திதான் விஸ்னு அம்சம் என்பர். பெண் வடிவில் சக்தியாகவும் ஆண் வடிவில் நாராயணனாகவும் தோன்றுபவன் மாயா என்பர். இவ்விரு மரங்களும் ஒன்றாக வளர்ந்த இடம் அஸ்வத்தப் பிரதட்சணம் என்பர். இவ்விடத்தில் நாராயணியாகிய காளி மூலத்தில் கொலுவிருக்கின்றாள். இந்த ஆலயத்தில் சிவபெருமானும் லிங்க ரூபராகி அமர்ந்துள்ளார். ஸ்ரீமந் நாராயணரும் சயன தோற்றத்தில் காட்சி தருகின்றார். சிவ, விஸ்னு சம்பந்தமான அம்சங்களுடன் கூடிய இவ்வாலயத்தில் இவ்விரு விருட்சங்களின் தோற்றம் மேலும் பல நன்மைக்கே ஆதாரம். நாக தோசங்களைப் போக்க வல்லவள். காளி இராகு காலப் பூசை யில் சர்ப்ப தோசம், செவ்வாய் தோசம் என்பவற்றை நீக்கமுடியும். திருமணப் பாக்கியத் தடையாக நிற்பது செவ்வாய் தோசம். இதற்கான பிராயச் சித்தம் துர்க்கை வழிபாடு. காளியும் துர்க்கையும் ஒன்றான சக்திதான். இவ்வகையில் பார்க்கும் போது இவ் வையகத்

தில் நாகேஸ்வரர் வழிபாடு மிகவும் பலன் தரக்கூடிய தாகவுளது. சிவனனுக்கிரகம்- திருமால் அனுக்கிரகம், சக்தியனுக்கிரகம் யாவும் ஒருசேரப்பெறும் வாய்ப்புகள் உண்டு.

இவ்விருட்சங்களை வலம்வரும்போதே இத்தெய்வங்களையும் வலம் வந்து வழிபாடு செய்யும் நிலையில் ஆலயம் அமைந்துள்ளது.

அஸ்வத்தப் பிரதட்சணமாக அமைந்த தலவிருட்சங்களை பதினொருதரம், அல்லது 12 தரம், 108 தரம் வலம் வந்து பால், பழம், பன்னீர், இளநீர், திரவியங்களால் விருட்சங்களை நிவேதித்து தீபதூபம் காட்டி வழிபட்டால், தடைப்பட்ட கல்யாணம், புத்திரப்பேறு என்பன நிச்சயம் கைகூடும்.

ஏனெனில் சர்ப்ப தோசமே, திருமணத்தடையாயும் சந்தானத் தடையாயும் அமைகின்றன. இந்த தோசங்களுக்கான இரட்சகமூர்த்தி விஸ்ணுவே. அவரின் மாயாசக்தியாகவே காளி தோன்றுகிறுள்.

எனவே, நாகவழிபாடு இவ்வாலயத்தில் பலவிதமான தோசங்களையும் நீக்கி பரிபூரணமான தன்மையளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# Compliments

# from

V

# East West
# Clearing & Forwarding Ltd.

P. O. BOX 678

CARGILS BUILDING,

COLOMBO

Tel:— 548300

# மூலத்தில் முதல்தேவி

நம் கடம்பனுக்கு நடமாடும் கோயில் நமதுடம்பு. சிரசுதான் கோயிலின் மூலத்தானம். ஐம்புலன்கள் அங்கு மணிவிளக்குகள். சகஸ்ராரம் எனும் புருவமத்தி சிவனும் சீவனும் சக்திக்குமிடம். அதுதான் முகத்தினில் பிரதானம். அது போல ஆலயத்தில் பிரதான மண்டபம் மூலத்தனமே. மூலத்தனத்திற்கு மற்றொரு பெயர் கர்ப்பக்கிரகம். தெய்வம்சாந்த நித்தியமாக எழுந்தருளுவது இங்குதான். இங்கு மூலத்தில் எந்த மூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்படுகிறதோ அந்த மூர்த்தத்தின் பெயரால் அந்த ஆலயம் அழைக்கப்படும்.

நமது ஆலயத்தில் மூலத்தானத்தில் அன்புவனங்களுக்கும் முழுமுதல் தேவியான ஆதிசக்தி, மகாதிரிபுரசுந்தரி என்றெல்லாம் ஞானியரால் போற்றித்துதிக்கப் பெறும் ஸ்ரீ பத்திரகாளியன்னை வீற்றிருக்கின்றாள். அவளின் திருநாமத்தின் பெயராலேயே இப்பதி புகழ் பெறுகின்றது.

எங்கள் குடும்பத்தில் எத்த நாளிலும் குலதெய்வமாக போற்றித் துதிக்கப்படுவள் இந்த அன்னைதான மூலத்தான தேவியாக அமரும் அன்னையின் அடியவர்கள் என்ற முறையில் சில நேர்த்திக் கடன்களைச் செலுத்த நினைத்தோம். எமது இயல்புக்கு ஏற்ப அந்தத் தொண்டினையும் செய்தோம்.

அழகும்; அருளும் பொலிவுடன் திருவும், மலிந்த இத்தலத்தின் புதுமைகள் அனைத்திற்கும் இவள் தான் மூலகாரணம்.

சூலத்தில் சூட்சுமமாகவே வந்தாள். ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் மூன் நிறுத்தப்பட்ட சூலம்; காளியின் இருப்பிடமாகியது. வரதராசருக்கு தங்கையல்லவா காளி. மாயவன் உடலில் துர்க்கையை தோற்றுவித்தவளும் இவள்தானே. சோடஷ நியாசத்தின்படி நாரணன் சோதரியாகத் தோன்றியபடியினால்தானே- ''என்றும் மூவா மிகுந்தற்கு இளையவளே'' என்று அபிராமிப்பட்டர் பாடுகிறார். இந்த உறவு இருவருக்கும் காத்தற் தொழிலில் ஒருமித்துக் காணப் படுகிறதல்லவா. துட்டர்கள் வதத்துக்காகவே திருமாலின் தசாவதாரம் போல, அன்னை லீலைகளும் தோன்றின.

தேவிமான்மியம் தேவி மகாத்மியம், என்பன அன்னையின் பரத்துவத்தையும், மகத்துவத்தையும் புகழ்ந்துரைக்கும்.

செவ்வாய் கிரகதோச நிவாரணத்திற்கான சக்தி துர்க்கை. துர்க்காவின் தோற்றம் திருமால், காளிதான் அந்தக் காரியத்தின் காரணி. எனவே கிரகதோஷ நிவாரணியாக காளியன்னையை வழிபடுவது மிகப் பொருத்தம்.

அரசினை சிவாம்சமாகவும், வேம்பினை சக்தியம்சமாகவும் கொள்வது இந்துமத மரபு. இரண்டும் சேர்ந்த நிலை அஸ்வத்தப் பிரதட்சிணம் என்பர். இந்த விருட்சவழிபாடு சாப்ப தோசம்; காட்டதோசம் ஆதியன நீக்கவல்லது. அதே விருட்சத்தில் நவக்கிரகநாயகியையும் சேர்த்து வழிபடும்போது;

எத்தவிதமான கோளும், நாளும் நம்மை எதுவுமே செப்பாது; வாழும் நெறியில் இன்பம் குறையாது. ஆகவே மூலத்தான மூத்தவளை முழுமனதுடன் பூஜித்து- நமது துன்பங்கள் தீர்த்து இன்பமாய் வாழ்வோமாக.

தேவதாஸ் குடும்பம்

Best Wishes

from

V

NORTH WEST HOLDINGS LIMITED.

99, COTTA ROAD,

COLOMBO - 8.

# திருவுருவங்களை கல்லாலும் செம்பாலும் அமைத்த காரணம் யாது?

--திருமுருக கிருபானந்தவாரியார்

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கி இருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகிறது. சில வேள்வி வளர்த்து வேள்வியில் எழும் சிவ வொளியை நிறைகுடமாகிய கும்பத்திற் சேமித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினர்கள். எனவே, சோதிமயமான ஒளியின் ஆற்றல் அக்கற் சிலையில் அமைந்திருக்கிறது. இதனை நம் முன்னோர் கருத்திற் கொண்டே மூலஸ்தானத்தில் அமைந்த தெய்வ உருவங்களைக் கல்லிலே அமைத்தனர்.

ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை ஊருக்குள்ளே ஒளிபாய்ச்சும் கப்பி செம்பினால் அமைந்திருப்பதைக் காண்க. செம்புக் கம்பிக்கு மின் பாய்ச்சும் ஆற்றல் உள்ளது. ஆகவே, மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மக்களின் உயர்வு கருதித் திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவமூர்த்தியைச் செம்பினால் அமைந்தனர், நம்முன்னோர்.

நம்முன்னோர்களின் மதிநுட்பத்தை எண்ணிப் பார்க்கும் போது உள்ளம் உருகுகின்றது, இத்தகைய இந்து மதம் போதித்த உண்மைகளே இன்றைய விஞ்ஞான யுகத்திற்கு வழியமைத்திருக்கிறது. மற்றெல்லா மதங்களிலும் பார்க்க இந்து மதம் அர்த்தமுள்ள மதமாகத் திகழ்வதை யார் மறுக்க முடியும்.

With the Best Compliments

from

PAINTS & GENERAL INDUSTRIES LTD.,

3rd FLOOR, HEMAS BUILDING,
BRISTOL STREET,
COLOMBO - 1

# பிஞ்சு நெஞ்சங்களின்

# கொஞ்சும்

# அஞ்சலிகள்

# காத்திட வாருமம்மா

அண்ட மெலாம் காக்கின்ற பத்ரகாளி
அன்னை மூகாம்பிகே வாருமம்மா
அரச மர நிழலிலே வீற்றிருப்பாய்
அரிய திரு வடிகளை நாம் போற்றுமம்மா
வேண்டி நிற்கும் மக்களுக்கு வரமருளும்
வேதாந்த நாயகியே காருமம்மா
தூண்டு சுடர் மகிமைகள் காட்டிவரும்
சுந்தரி நிரந்தரியே அருளுமம்மா

ஊனுடம்பு ஆலயமாம் உள்ளமதனில்
உயிரான லிங்கமதில் நீஇருப்பாய்
அணுவான அணுவுக்குள் இருப்பவள் நீ
அசையாத பொருள்களையு மசைப்பவள் நீ
பணிவான மங்கையர்க்கு துணையுமாவாய்
பாடி ஆடும் பக்தருக்கு பலமாவாய்
கனிவான அருளரசி காளியம்மா
காலமெலாம் காத்திடவே வாருமம்மா

திருமதி நிர்மலா விஜயகுமார்,
மயூரா இடம்

ஓம் சக்தி

# விழிநீர் துடைக்கும் வித்தகி

புதுப்புனலில் நீராடும் மனத்தெளிவுகள்
பொய்ப்பதில்லை என்றுமே நம் நம்பிக்கைகள்
நலம் தருமே ஆதிசக்தி அருள் துளிகள்
நன்மைதான் உதயமாகும் அவள் தான் பற்றுங்கள்

தருணமதில் வழிகாட்டும் வடிவமாவாள்
தஞ்சமென வருவோர்க்கு துணையுமாவாள்
குழம்பி நிற்கும் மழலை எமை காப்பதற்கே
குன்றாத கருணையுடன் நாடி வருவாள்

கருவாகி வளரும் சக்தி சுடராவாள்
காத்து நிதம் ரட்சிக்கும் பாச இமையாவாள்
நித்தம் விழிநீர் துடைக்கும் தெய்வ அறமாவாள்
நிதம் மறவாமல் பணிந்திட்டால் உயிர்க்குயிராவாள்

அன்னையவள் கரம்பற்றி நடைபயில்வோம்
அவள் காட்டும் வழிகளில் இனி செல்வோம்
தங்கு தடை அற்றதோர் புதியபாதை இனி
தந்திடுவாள் அமைந்திடுவோம் நமது வாழ்வை

''அடியவள்''
திருமதி பிரபாகரன்

ஓம்

# அவள் பாதாரம்
# நமக்காதாரம்

ஆயிரம் கவலைகள் எமை சூழும்
அனுதினமும் மனம் தணலாகி வாடும்
விடை காண முடியாவிளைவு தோன்றும்
விம்மல்களோ நிதம் அங்கு சங்கமமாகும்

சங்கமத்தில் சக்திகருணை கங்கையாகும்
சங்கடங்கள் அழித்திடவே பொங்கிப் பெருகும்
பிரவாகத்தில் பிரச்சனைகள் அள்ளுண்டு போகும்
பிறகென்ன! நம் உள்ளங்களில் அமைதி தானே வாழும்

அமைதி காணும் நெஞ்சமோ கோயிலாகும்
அன்னை சக்தி கருணை அங்கு கொழுவிருக்கும்
எண்ணமெல்லாம் பணித்திடும் இன்பம் தோன்றும்
எண்ணியது பலித்திடும்! அருள் துணையாகும்.

அன்னையவள் கருணையினால் நம்மனதின் பாரம்
அழிந்தபின்! துளிர்க்காதே நம் கண்ணின் ஈரம்
துல்லியமாய் வழிகாட்டும் அவள் பாதாரம்
துணையாகும் அவைநாளும் நமக்காதாரம்

பிரபாகரன் தம்பதியர்

Compliments

from

VENUS
ENTERPRISES

24. 4th CROSS STREET
COLOMBO - 11.

Tel : 29891, 22128

# தத்துவ முத்துக்கள்

இறைவன் திருக்கோயிலில் மட்டும்தான் இருக்கின்றான் என்று எண்ணக் கூடாது. நம் உள்ளத்திலே பிரியாது இருக்கின்றான். அதனால் ''பிரான்'' என்று இறைவனை அழைக்கின்றோம். எண்ணத்திலும் சொல்லிலும் இறைவன் இருக்கின்றான். ஆதலால் நம் எண்ணங்களும் சொல்லும் செயலும் தூயனவாக இருக்க வேண்டும். அருளறியப் பாவங்கள் செய்தல் கூடாது.

— திருமுருக கிருபானந்தவாரியார் —

யாதும் ஒரே பரம்பொருளின் தோற்றம் என்ற ஞானத்தின் மீது உன் கர்மங்களை அமைத்துக்கொள். அக்கருமத்தில் அடக்கம், அன்பு, அருள், அஹிம்சை என்பனவாகிய பக்தியம்சங்களைத் ததும்பி இருக்கச்செய். வெறும் பகதி எந்த உணர்ச்சிக்காற்றாலும் அடித்துச் செல்லப்படுமாதலால், அந்தப் பக்தியில் ஞானத்தின் கனத்தை நிறைத்துக்கொள். வெறும் ஞானம் இதயத்தை வரட்சியாக்கும். பக்தியே அதை அனுதாபத்தால் மென்மையாக்குகிறது. கர்மம் என்பதோ கைக்கு ஒரு வேலையைக் கொடுத்து உனக்கு என ஏற்பட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் நீ புனிதப் படுத்திக்கொள்ளச் செய்கிறது.

— சாயிபாபா —

பக்தன் ஒருவன் செய்யக்கூடிய உயரிய வழிபாடு, நடமாடும் தெய்வங்களை வழிபடுதலே ஆகும். ஆறு அல்லது பன்னிரண்டு ஏழை மக்களை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வந்து தத்தம் சக்திக்கு இயைய அவர்களை உபசரியுங்கள். நாராயணர்களாக கருதி அவர்களுக்கு சேவை செய்யுங்கள்.

— விவேகானந்தர் —

*with best compliments*

*from*

New Fernando Clearings and Transport

63, NEW NAHAM SQUARE

COLOMBO-13.

## விநாயகர் துதி

ஓம் என்னும் ஒத்தை நகம் உடைய விநாயகனே —
உன் பாதம் துதிக்கின்றேன் — தீய
வினைகள் யாவும் நீக்கிடும் வல்லப கணபதியே
நல்லருள் தரும் சக்தி விநாயகனே சக்தியை தந்திடுவாய்

## நவக்கிரஹ துதி

ஆதித்யா ஸஸோபாய மங்களாய
பதாயஸா குரு சுக்ர சனி ரஷ்ஸா
ராகவே கேதுவே நமக !

## அம்பாள் துதி

அரசமரத்து அடியில் வீற்றிருக்கும் அன்னையடி நீ
அத்தனை உயிர்க்கும் திரிசூல நாயகியே - தாயே
ஞாயிறும் திங்களும் மதி சூடியவள் நீயே
காப்பவள் நீயே பத்திரகாளியே உன் பாதம் சரணம் தாயே.

# Compliments

# from

V

# Almajid Traders

DEALERS IN: HARDWARE AND GENERAL MERCHANTS
CLEARING, CUSTOM HOUSE AGENT AND TRANSPORT CONTRACTORS

**116/2 - D. Prince Street, Colombo - 11, Sri Lanka.**

Tele: 32633 Res: 545028

# பஜன் பாடல்கள்

இசையால் இசையாத தொன்றில்லை. உள்ளத்தால் ஒன்றித்து உருகிப்பாடும் போது கருணை வெள்ளத்தால் நம்மை, தெய்வம் நெருங்கிவரும். துன்பத்தின் விடுதலை தூய நினைவுடன் மனங்கசிந்து பாடுதலே ஆகும்.

அந்த முறையில் எல்லாரும் இணைந்து பாடும் இசை மயமே 'பஜன்' - அந்த கூட்டிசையையும் அன்னைக்காகச் சமர்ப்பிக்கின்றோம்.

தொகுப்பு: மலர் ஆசிரியர்

1. காளி காளி, மஹாகாளி பத்ரகாளி ஜெய ஜெய
காளி காளி மஹாகாளி ருத்ர காளி ஜெய ஜெய
காளி காளி மஹாகாளி நடனக்காளி ஜெய ஜெய
காளி காளி மஹாகாளி சுடலைக்காளி ஜெய ஜெய (காளி)

அம்பிகே முகாம்பிகே குடும்பதேவி பத்ரகாளி
அன்னபூர்ண புவனேஸ்வரி கன்னபாணி சாதப்பரி
சுந்தரி அனந்த புரி சங்கரி சாதகரியே (அம்பிகே).

காளி பயங்கர மாலினி சூலினி
ப்ரம்மா விஷ்ணு ருத்வஸ்வரூபினி (காளி

ஜெயஜெய தேவி தயாலஹரி
ஜனனி சரஸ்வதி பாலய மாம்

அமலே சமலா ஸன ஸஹிதே
அற்புத சரிதே பாலயமாம்

மாதர் மங்கள குண ஜாலே
மஞகிய ஸீலே பாலயமாம்

கிரீடகுண்டலே ஸுஸோபிதே
கின்னர கீதே பாலயமாம் (காளி)

காளி மஹேஸ்வரி பார்வதி சங்கரி
சரணம் சரணம் சரணம்மா

2. கேட்டால் கேட்டவரம் தரும்தேவி துர்க்கையம்மா
தேடி வரும் எங்களுக்கு அருள் புரிவாய் நீயம்மா
உன்னையன்றி உள்ளத்திலே யாரை வைத்தேன் சொல்லம்மா
என் குருநாதர் வடிவினிலே வந்தவளும் நீயம்மா (கேட்டால்)

மஞ்சளுக்கு மகத்துவத்தை தந்தவளே தாயம்மா
மங்கல குங்குமத்தில் சிரித்திடுவாய் நீயம்மா
வேப்பமரம் அத்தனையும் உன்னுடைய வாசம்மா
வேண்டிவரும் எங்களுக்கு அருள் புரிவாய் நீயம்மா
குத்துவிளக்கேற்றி வைத்தோம் குலவிளக்காய் நீ வருவாய்
மாவிளக்கை ஏற்றிவைத்தோம் மனம் குளிர வந்திடுவாய்.
பொங்கிவரும் புன்னகையால் பூமியெங்கும் காப்பவளே
மூக்குத்தி ஒளியாலே கண்களைத் திறப்பவளே (கேட்டால்

ஆயிரம் கண்கொண்டவளே அகிலாண்டேஸ்வரியே
ஆதிசக்தி நாயகியே சங்கரியே சௌந்தரியே
என்னைப்பற்றிக் கேட்கவில்லை எனதுள்ளம் நீ அறிவாய்
வந்திருக்கும் மக்களுக்கு வரம் கொடுத்து காத்தருள்வாய்
நான் உன்னைக் கேட்பதெல்லாம் உன்னுடைய தரிசனமே

உன்னை என்றும் பாடிடவே நீ எனக்கு அருள் புரிவாய்
உன்னை நான் பார்க்கின்றேன் கண்கள் எல்லாம் குளிர்ந்தம்மா

ஆதி பராசக்தி தாயம்மா - எங்கள்
அகிலாண்ட நாயகி நீயம்மா
ஆனந்தத்தின் எல்லைதானம்மா - எங்கள்
அன்னை பூவனேஸ்வரி தாயம்மா - ஆதி

திருவேற்காட்டில் வாழும் கருமாரியே - எங்கள்
திரு நாட்டில் உருமாறி வரும் தேவியே
திரிசூலி திருமாலின் சோதரியே - உந்தன்
திருக்காட்சி தந்தருள வேண்டும் அம்மா
மயூரா பதிதனிலே காளி

உன்னை எண்ணி எண்ணி நெஞ்சம் உருகினேன்
உன்னை எங்கெங்கோ தேடிநான் ஓடினேன்
பண்ணிசைத்து உன் புகழ் பாடினேன் - நீ
பாராமுகம் இது நியாயமோ - ஆதி

கோடிக்கோடி தவம் செய்தாலும் - உந்தன்
கோலம் காண்பனோ என் வாழ்விலே
தேடக்கிடைக்காத தெய்வமே எங்கள்
தேவி பராசக்தி தாயம்மா

உன்னை எண்ணி எண்ணி நெஞ்சம் உருகினேன்

கருணைக்கடல் தேவி காளி அம்மா - எங்கள்
கவலைகள் தீர்த்திட வாரும் அம்மா
காணும் பொருளிதனில் நீ தானம்மா - என்
கண்டு கொண்டேன் உந்தன் அருள் தானம்மா.

1. சிலப்புச் சேலைகட்டிக் கிட்டு
   வேப்பிலையும் எடுத்துக் கிட்டு
   சிங்கார மாக வாடி காளியம்மா - அடி
   ஸ்ரீ தேவி காளியம்மா வாடியம்மா

2. உன் வேப்பிலையும் திருநீறும் வேண்டியதை தந்திடுமே
   திரிசூலம் கொண்டு இங்கு மாரியம்மா
   எங்கள் துன்பமெல்லாம் போக்கிடவே வாடியம்மா

3. சட்டியில் நெருப்பெடுத்து சாதிராடும் மகமாயி
   கருணை உள்ளம் கொண்டவளே மாரியம்மா
   எம்மை கட்டிகாக்கும் தாயே இங்கு வாடியம்மா

4. மஞ்சளோடு குங்குமம் மங்காத செல்வங்களும்
தந்து எம்மை காத்திடுவாய் மாரியம்மா - அடி
மரிக்கொழுந்து மலரெடுத்து வாடியம்மா

5. ஆயிரம் கண் கொண்டவளே அகிலாண்ட ஈஸ்வரியே
ஆதிபரா சக்தியடி துர்க்கையம்மா - அருள்
வடிவில் வந்தவளே வாடியம்மா

வஞ்சமின்றி வாழவைப்பாய் காளியம்மா
மயூரபதி வீற்றிருப்பவளே வாடியம்மா
சமய புரத்தாளே மாரியம்மா
தக்க சமயத்தில் காப்பவளே வாடியம்மா
குத்து விளக்கேற்றி வைத்தோம் மாரியம்மா
எங்கள் குலவிளக்காய் நீ இங்கு வாடியம்மா
பம்பை உடுக்கை முழங்குதடி மாரியம்மா
காலில் தண்டை சிலம்பு குலுங்கிடவே வாடியம்மா
பொங்கும் புகழ் கொண்டவளே மாரியம்மா
உந்தன் பொற்பாதம் பணிய வந்தோம் வாடியம்மா
திலம் வாழ வந்தவளே மாரியம்மா
சத்தியத்தின் நாயகியே மாரியம்மா
எங்கள் சக்தியெல்லாம் நீதான்டி வாடியம்மா
மழையினிலே சிரித்திடுவாய் மாரியம்மா
எங்கள் பிழைகளெல்லாம் பொறுத்திடுவாய் வாடியம்மா
நாடு போற்றும் நாயகியே மாரியம்மா
நாரணனின் சோதரியே வாடியம்மா
அணையாத ஜோதியடி மாரியம்மா
உந்தன் பொற்கரத்தால் அணைத்துக்கொள்வாய் வாடியம்மா

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் துணை

V

## P. Viswanathan

*Stock-Holm S. P.*

*Upcot*

தாயே சரணம்

# Sharp Centre Ltd.

WHOLESALE & RETAIL DEALERS
IN TEXTILES SPECIALISTS
IN KNITTED FABRIC

106 *B. 2nd Cross Street,*
*Colombo* - 12.

*T'Phone:* 545262, 26197

என்றும் அவள்தான் துணை

V

# Synthetic Co

WHOLESALE & RETAIL
DEALERS IN TEXTILES

*METRO TRADE CENTRE*

107-111/1 *A 2nd Cross Street,*
*Colombo* - 11

*T'Phone:* 26197

துயர் துடைக்கும் தாயே துணை

# Venus Textiles

WHOLESALE AND RETAIL DEALER
IN TEXTILES

91 *D. 2nd Cross Street,*
*Colombo* 11.

*T'Phone:* 21368

# அன்னை அருள் பெற்ற

## அருட்கவி

# அமுதங்கள்

உ

# அபிராமி அம்மை பதிகம்

(சில பாடல்கள்)

கலையாத கல்வியும்
குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்

கன்றாத வளமையும்
குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்

சலியாத மனமும் அன்
பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்

தாழாத கீர்த்தியும்
மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும்
கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்

துய்யநின் பாதத்தில்
அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;

அலையாழி அறிதுயிலும்
மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!

அமுதீசர் ஒரு பாகம்
அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமியே!

ஞானந் தழைத்துன்
சொருபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்

நடுவினி லிருந்து வந்
தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு

ஈனத்தனைத் தள்ளி
எனதுநா னெனுமானம்
இல்லாம லேது ரத்தி

இந்திரிய வாயில்களை
இறுகப்பு தைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே

ஆனந்த மானவிழி
அன்னமே! உன்னை என்
அகத்தா மரைப்போ திலே

வைத்துவே றேகளை
யற்றுமே லற்றபர
வசமாகி அழியாத் தோர்

ஆனந்த வாரிதியில்
ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே'

எழுதிசர் ஒருபாகம்!
அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மிகையுந் துரத்த வெம்
பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த

மிடியுந் துரத்த நரை
திரையும் துரத்த மிகு
வேதனை சளுந் துரத்த

பகையுந் துரத்தவஞ்
சனையுந் துரத்த
பசியென் பதுந்து ரத்த

பாவந் துரத்த
பதிமோகந் துரந்த
பலகா ரியமுந் துரத்த

நரையுந் துரத்த ஊழ்
வினையுந் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்

நாவறண் டோடிநால்
தலர்ந்திடும் ஒல்லைசே
தமனுந் துரத்து வானோ?

அகில உலகங்கட்கும்
ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே,

எழுதிசர் ஒரு பாகம்
அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

### அருள்மிகு அபிராமிப் பட்டர்

அருளிய

# அபிராமி அந்தாதி

கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்க்கும் பாகத்(து) உமை மைந்த
னே உல(கு) ஏழும் பெற்ற
சீராபி ராமி அந்தாதி எப்
போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி
யே நிற்கக் கட்டுரையே.

நூல்

கோகத்தின் முதற்படிக்கு

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமல்
துதிக்கின்ற மின் கொடி மென்கடிக்
குங்கும தோய மென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்றன் விழுத்துணையே.

கணவன் மனைவி உறவு கனிய

புண்ணியம் செய்தன மேமன
மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும்
கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி
யாரகள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம
பாதம் பதித்திடவே.

நற்பண்புகள் வளர

அணங்கே அணங்குகள் நின்பரி
வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி
லேன்நெஞ்சில் வஞ்சகரோ (டு)
இணங்கேன் என(து) உன(து) என்றிருப்
பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன் என்கண்
நீவைத்த பேரளியே

நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்
குசமும் கருப்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்(கு) ஒரு தீங்கில்லையே.

WITH BEST COMPLIMENTS
FROM

**APEX STEEL COMPANY**

F 4, Abdul Jabbar Mawatha
Colombo - 12
Phone: 548654



WITH BEST COMPLIMENTS
FROM

**MALLIKA HARDWARE STORES**

39, Abdul Jabbar Mawatha.
Colombo - 12.
T'phone: 33819



W EST COMPLIMENTS

FROM

**Silver Krown Hardware**

No. 23, Abdul Jabbar Mawatha.
Colombo - 12
T. P. 31419



WITH BEST COMPLIMENTS
FROM

**AMBALS**

Hardware Merchants
47, Abdul Jabbar Mawatha
Colombo - 12.
T'phone: 549684

# எச்சரிக்கை

அன்னையின் சிறப்பான பூசைவேளைகளில், அவளின் அருளை வேண்டி ஆராதித்துப் பாடுவது!

ஊழியில் வந்து தோன்றினாய்
    இந்த உலகிலே வந்து ஆடினாய்
காளியாய் நாமம் சூடினாய்
    பத்ர காளி எச்சரிக்கை

பார்வதி பரமேஸ்வரி
    பரலோகங்களை தொழும் ஈஸ்வரி
சீர்மிகும் புவனேஸ்வரி
    சிங்க வாகினி எச்சரிக்கை

ஆனவே வந்து கொழும்பு நகர்
    மயூரபதி அமர்ந்தாய்
வாழவே வரங்கொடுத்தாய்
    பத்திரகாளியே எச்சரிக்கை

சக்தி சிவமானாய் ஈன்ற
    தாய் தந்தையுமானாய்
முக்தி முதலானாய்
    பத்ர காளி எச்சரிக்கை

சமபுரத்தாளே நல்ல
    சாம் பிராணி வாசகியே
அமையம் இதில் வருவாய்
    பத்ர காளி எச்சரிக்கை

சுடரே சுடரொளியே
    சுந்தரவே செந்திருவே
கடல் சூழ்புவி கொழும்பு நகர்
    காளி எச்சரிக்கை

மாயி மகமாயி
    மணி மந்ரசேகரியாளே
ஆயி வுமையவளே
    பத்ர காளி எச்சரிக்கை

கண்ணே நவமணியே - அரி
    கமலா அனைத்தாளே
விண்ணோர் குறை தீர்த்தாய்
    பத்ர காளி எச்சரிக்கை

அப்பன் நீ எங்கள் அம்மை நீ
    இந்த அவனியில் உண்மை தெய்வம்
இப்பெண் நீ எங்கள் துணையும் நீ
    - பத்ர காளி எச்சரிக்கை

வாழி பத்ரகாளி - எங்கள்
    வளமே அருள்தேவி
மயூரபதி ஆளும் - எங்கள்
    தேவி எச்சரிக்கை

உடப்பூரன்

# கும்மி (பதிகம்)

அன்னையின் கரக உற்சவத்தில் கும்மி ஆடும் வைபவத்தின் பின்னணியாகப் பாடப்படுவது, கரகத்தின் அருள் உருப்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் துடிப்பான சந்தமுடையவை இவை.

1. மாநகர கொழும்பு வெள்ளவத்தை தனில்
மயூர பதியில தானெழுந்த
கோமகள பத்திரகாளி கும்மி சொல்ல
குஞ்சரக் கணபதி காப்பாமே

2. அண்டங்கள் எல்லாம் நிறைந்து வந்தாள் அவள்
ஆதியான மூலம் ஆகி வந்தாள்.
தொண்டர் தொழுது நலம் பெறவே மண்ணில்
தூயதோர் காளியும் ஆகி வந்தாய்

3. வேப்பமரத்தடி சூலமதில் காளி
வித்தகியாகவே எழுந்து வந்தாய்
கும்பிட்ட அடியவர் குறைகளை போக்கிட
கோயிலிலே வந்து தானமர்ந்தாள்

4. மஞ்சளும் குங்குமம் துலங்க வந்தாள் காளி
மங்கையர் மங்களம் காக்க வந்தாய்
தஞ்சமென்ற பெயரை தற்காக்கும் நாயகி
தாயான காளியைப் பாருங்கடி

5. விண்ணோங்க நின்றிடும் அரசினைச் சுற்றியே
விளங்கிடும் புதிய ஆலயமாம்
மண்ணில் மயூரபதி தன்னை காத்திட
மாகாளி தானே கொலுவிருந்தாள்

6. கணபதி கந்தனைப் பக்கம் வைத்தாள் அவள்
கண்ணனும் மன்னனை சயனம் வைத்தாள்.
சிவனுடன் பைரவன் சேர்ந்து நவக்கிர நாகமும்
சேர்ந்து அருளிட தலைமை தந்தாள்

7. பம்பை உடுக்கை முழங்குதம்மா உன்னை
பார்க்கையில் பயமும் போகுதம்மா
நாடிடும் அடியர் உள்ளத்திலே வரும் நாயகி
என்றைக்கும் காத்திடம்மா

8. நெய் விளக்கேற்றியே நெஞ்சில் வைத்தோம்
அன்பால்
நித்தமும் உன் பெயர் சொல்லி வைத்தோம்
கை விளக்காய் துணை வருபவளே எங்கள்
கவலையைப் போக்கிட வாருமம்மா

9. அக்கினி சமுத்திரம் ஆனவளே சுடர்
ஆயிரம் கண்கள் உடையவளே
தற்க சமயத்தில் காரும்பம்மா இங்கு
சகல நலன்களும் தாருமம்மா

10. மங்களமானவள் காளியம்மா
வாழ்வைத் தருபவள் காளியம்மா
பங்கயத் திருவடி வாழியம்மா
இந்தப் பாரெங்கும் மங்களம் வாழியம்மா

உடப்பூரன்

# பஞ்ச காவியம்

[அன்னைக்கு அருள் கரகம் பாலிக்கும் வேளை, வழி நடைப்பாட்டாக அமைவது. பூசை வேளைகளிலும் பாடப்படுவது.]

1. அரியாட் சரத்தினில் சூலி ஓம் காளி
அகிலாண்ட நாயகி அறியவோ அறியாள்
திரிபுர சிவானந்தி வேத வேதாந்தி
மயூரபதி செழிக்க வரும் ஸ்ரீ பத்திரகாளி அம்மன்
ஏறுதமிழ் அன்பு செறி காவியம் இசைக்க
எழுகருணை அரிய தமிழ் வளருமா வளரும்
ஆறு முகனின் சோதரன் ஆனைமுகத் தையன்
மலரடிகள் அனுதினமும் மனதில் மறவேனே

2. ஆதி யந்தரி கௌரி நீலி கப்பிரி
அகிலாண்ட நாயகி அரி சகோதரியாள்
பாதிமதி சூடியுடன் ஆடும் மகமாயி
பரலோக சிவலோக நவயோக காளி
சோதி அந்தரி துர்க்கை எழில் சிங்க வாகினி
தூய்ய மகி ஷசுரா சரதடன காளி
நீதியாய் மயூரபதி நித்தம் செழித்துயர
ஸ்ரீ பத்திர காளி அம்மன் திருவடிகள் துணையே

3. இந்து மலர் சூடியுட னேகடலை தன்னில்
இன்பமுடனே நடனம் ஆடும் மகமாயி
கந்தனொடு கரிமுகன் தன்னையருள் தேவி
காரணி கடாட்சி வளர் பூரணி காளி
விந்தை செறி முக்கண்ணி வேத வேதாந்தி
விமலி திரிபுர கௌரி வித்யாபிரத்தி
சுந்தரமுயர் மயூரபதி நித்தம் செழித்துயர
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருவடிகள் துணையே.

4. உம்பர் தொழுபகவதி பரமபத மனோன்மணி
உத்தண்டி திரிசூலி சூலி ஓம் காளி
தம்புரு குடாதரி மாதங்கி திரிசூலி
சாலோக சாருப சாயுத்த தேவி
நம்பினோர்க் கருள்கின்ற கமல நாரணி நீ
நளினமொடு வீரமொடு நயன காமாட்சி
செம்மையாய் மயூரபதி நித்தம் செலுத்துயர
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருவடிகள் துணையே

5. எண்ணெட்டு அறுபத்து நாலுகலை ஆன நீ
ஈஸ்வரியே வடகடலிலே இருந்த தாயே
முட்டவே வருமங்கு அத்தூளி ஆன நீ
முழுகடல்கள் ஏழையும் முன்னே குடித்த நீ
துட்டப் பிசாசுகளை வெட்டியே கொன்ற நீ
கடலைதனில் பேச்சி வடிவாகியே நின்ற நீ
கட்டளை மயூரபதி நித்தம் செழித்துயர
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருவடிகள் துணையே

தொகுப்பு - உடப்பூரன்

# BEST WISHES

# FROM

# N. P. M. Thahir & Sons

*CLEARING FOWARDING & HOUSE AGENT*

42, PEER SAIBO STREET, COLOMBO 12.

Tel :— 28360

# HINDUISM A WAY OF LIFE

# "LIFE AND DEATH"

All Life is one
Hate not anyone
For you are contained in all,
In Harming Others Lies Your Own Fall.

Life Is God in expression
Life is fight for perfection
Death is only an aspect of life.
It leads to a newer and fresher life.

Life is continuous, it never dies
It is change of form cognise
The flower may fall: The Shade may fade
But its fragrance does ever prevade.

**Swami Sivananda**

# Compliments

# from

# UNIWAY GARMENTS

225/3, 2nd CROSS STREET,

COLOMBO-11.

Tel:— 546261
545590
33297

# BEST WISHES

# FROM

V

# Expo Garment Industries

225/3 2 nd CROSS STREET
COLOMBO - 11

Tel :— 545619

*with best compliments*

*from*

Sole Agents for

**ORIENT**

Delux Ceiling Fan

**ESTEE & SONS**

702 GALLE ROAD

COLOMBO - 3.

Tel :— 588965, 501726

Compliments

from

OSCAR STEEL CENTRE

140, BARBER STREET,
COLOMBO - 13.

Tel : 540843

COMPLIMENTS

FROM

Construction Liaison Ltd.

No. 16, QUARRY ROAD,
DEHIWALA.

Telephone — 715117
— 715118
— 717234

ஸ்ரீ பத்ர காளி தாயே துணை

# Unicornd

91, 2/4, 2nd Cross Street,
Colombo 11.

---

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அனைவருக்கும்
அருள்புரிய வேண்டுகிறோம்

திரு & திருமதி

## விஜயகுமார்

கொழும்பு - 15.

---

ஸ்ரீ பத்ர காளி அம்மன் துணை

# Gold Wing Enterprise

Colombe

---


Best Compliments from

# DECORAMMA


Dealers in Paints & Hardewere
Authorized Dealers for C. J. C. Ltd,
DUCO — DULUX — PENTAC:TE


152, Galle Road Dehiwala.
T'Phone : 715196

# ஆலய அமைப்பு




# வரைபடம்





1
2
3
4
5
10
11
12
13



1: விநாயகர்
2. மூலத்தானம் – ஸ்ரீ பத்ரகாளி அம்மன்
3. பாலமுருகன்
4. வசந்த மண்டபம் - அம்பாள்
5. புராதன அம்பாள்
6. நாராயணர் சயனம்
7. நாகேஸ்வரர்
8. லிங்கேஸ்வரர்
9. நவக்கிரகம்
10. சிம்மம் – பலிபீடம்
11. பைரவர்
12. அபிஷேக நீர்
13. பாத சுத்தி நீர்

கனவுலக வடிவங்களுக்கு காகிதங்களில் உருவம் அமைக்கும்

# அற்புத சித்திரக் கலைஞர்

இவ்வாலய பரிபாலன சபை செயலாளர் வாசுதேவன் சுரேஸ் இளமையில் இருந்தே இவ்வாலயத்தில் பற்றும், பக்தியும் கொண்ட இளைஞர். இவர் ஒரு கட்டட நிர்மாணக் கலைஞர். கற்பனையில் காணும் கனவுலக வடிவங்களுக்கு காகிதங்களில் உருவம் அமைக்கும் அற்புத சித்திரக் கலைஞர். ஆலயம் எப்படி அமைய வேண்டும் என்பதை இளமையிலிருந்தே தியானக்கோயிலாக உருவாக்கியவர்.

புதிய ஆலயம் அமைந்ததற்கான பணிகள் தொடங்கிய போது ஆலயத்திற்கான அமைப்பை வரைந்து கொடுத்தவர் இவர்தான். அவரது கற்பனையின் வடிவுக்கு கல்லிலும், மண்ணிலும் கலைவண்ணம் தந்தனர் ஸ்தபதி குழுவினர். இன்றைய எழில் தோற்றத்திற்கு சுரேஸ் அவர்களின் அடிப்படையான வடிவந்தான் காரணம் என்றால் மிகையாகாது.

மலர்க்குழு

*with best compliments*
*from*

Partners
V. NAMASKHAN, K. A. VELAITHAN

# UNITED TEA CHESTS SUPPLIERS

MANUFACTURERS & DISTRIBUTORS OF TEA CHESTS,
ESTATE SUPPLIERS
EXPORT, IMPORT, DEALERS IN TEA, TOURS & TRAVELS

**101/17 Jampettah Street,**
**COLOMBO - 13.**

**Tel : 546421, 541043**

WITH BEST COMPLIMENTS
FROM

# Sridevi Printers (Private) Ltd.

QUALITY PRINTERS IN OFFSET AND LETTER PRESS
27, *Pepliyana Road, Nedimala*
*Dehiwala* *Tele :* 716709

# சக்தி வழிபாடு

தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும், நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

என்று அபிராமி பட்டர் துதிக்கின்றார். சித்தி தரும் தெய்வமாய், மூத்தி தரும் முதல்வியாய் பக்தி தரும் பார்வதியாய். புத்திதரும் பூரணியாய் புவனம் எல்லாம் புரந்து காக்கும் புரந்தரிய ய் உலக மாதாவாகிய அம்பிகை அருளுருக் கொண்டு அவனியெல்லாம் காத்தருளுகின்றாள்.

"யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்" என்று பாரதியார் பாடுகின்றார். சக்தி - கனலாய், புனலாய் கதிர் நெல்லில் பயிராய் கனலாய் ஒளியை, மழை நீர்த்துளியாய் உலக உயிர் சக்தியாய் எல்லாவற்றிலும் நின்று மிளிர்கின்றவள்.

தானே உயிராயும் அதைக் காப்பவளும் தானாகி வானையும் இந்த வையத்தையும் தன் கடைக்கண் பார்வைக்கடாட்சத்தால் பாலித்து நிற்பாள் அன்னை. வேண்டுபவர் மன முருகி அவளின் தாள் பணிந்து நின்றார் வேண்டும் வரம் அருள்வாள். அன்னை பாராசக்தி.

இன்றவளைப் பக்தி செய்பவர்கள். ஏதாவது ஒரு முறையைக் கொண்டபடி பக்தி செய்வது வழக்கம் அதாவது எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும் தோழனாகவும் தலைவனாகவும் பக்தியோடு வழிபடுவது வழக்கமாகும். இத்தகைய தொடர்புகளுள் இறைவனைத் தாய் என்று சொல்வது தலையாயதாகும், தாய்க்கும் பிள்ளைக்கும இடையே உள்ள இணக்கம் ஒப்பற்றது. உலகில் வேறு எதனையும் அதோடு சேர்தாக்க முடியாது. அன்பு தூய்மை பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவமும் ஆகியவற்றுள் சிறந்தவள். தாய். தாயை அணுகக் குழந்தை ஒருபோதும் அஞ்சுவதில்லை தன் பிள்ளை நன்று செய்தாலும் தீயவை செய்தாலும் உயர்நிலை அடைந்தாலும், தாழ்வு உற்றாலும் ஒருபோதும் தாயின் அன்புமாறாது. ஆண்டவனிடத்தில் அடிமையானவன் பயபக்திகொண்டு சற்று எட்ட நிற்கின்றான். எனவே தாயின் தன்மையை உடைய தெய்வத்தை வழிபடுவதும் மிக எளிதானதாகும்.

அண்டங்கள் அனைத்தும் சிவசக்திமயமாக இருக்கின்றன. 'சக்தி பின்னபிலான் எங்கள் பிரான்' என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்கேற்ப, சக்தி சிவனிலிருந்து பிரியாத ஒன்றாக இருக்கின்றது. இவை இரண்டும் இணைபிரியாது உலகெங்கும் இயங்குகின்றன. உயிர்கள் மேல் வைத்த பெருங்கருணையலே இறைவன் ஐந் தொழிலையும் புரிகின்றார். உண்மையிலே சிவன் இருந்தபடியே இருக்க இவள் முன்னிலையிலே இவள் திருவருளால் ஐந்தொழிலும் நிகழ்கின்றன. சிவனது இத்திருவருளையே நாம் சக்தி எனப் போற்றுகின்றோம். இச்சக்தி நமக்கு அன்னையைப் போல் அணுக்கமாக நின்று நம்மை உலக வாழ்க்கையல் ஈடுபடுத்தி, அவ்வழியால் ஞானத்தை நல்கி அப்பனிடம் அழைத்துச் செல்கிறாள். ஆதலாலே நாம் கடவுளை வழிபடும்போது முதலில் அம்மையையும் பின்னர் அப்பனையும் நினைந்து அம்மையே அப்பா என்று அழைத்து அகங்குழைகின்றோம். இதனால் போலும் சிவனுக்கு ஒரு இராத்திரி எனச் சிவராத்திரியைக் கொண்டாடிய நம் முன்னோர், அன்னைக்கு ஒன்பது இராத்திரிகளை நவராத்திரி என கொண்டாடியுள்ளனர்.

இக்கலியுகத்தில் காளியையும் துர்க்கையையும் பிரதிபிம்பமாக ஆலயத்தில் அமைத்து வழிபடுகிறார்கள். துஷ்டரை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதாய் தேவி 'தர்மதேவதை' ஆகின்றாள் எனவே இவளை வழிபடுவதால் புறப்பகையான நாஸ்திக தன்மையும் அகப்பகையான காம விகாரங்களும் நிவர்த்தியாகின்றன. அன்னையவள் தாள்பணிந்து அவளே கதியென நினைந்து வேண்டுவார்க்கு கருணையை மழைபோல். அதாவது மாரிபோல பொழிவதால் மாரியம்மை எனவும் பெயர் கொள்ளும் சக்தியை நாமும பணிந்து அவள் அருளைப் பெற்று உய்வோமாக!

செல்வி ராதா, மால்மருகேசன்

என்றும அவள்தான்
துணை

# Taarikka Textile

SPECIALIST FOR SAREES
&
BLOUSE PIECES

145, Galle Road,
Dehiwalo.

With Best Compliments
from

# GOLD STEEL

Importers and General Hardware
Merchanss
Authorised Dealer for Steel Corporation
and B. M. C.

18, Abdul Jabbar Mawatha,
Colombo - 12-
Phone : 34084

BEST COMPLIMFNTS
From

# NAVALANKA

General Hardware Merchants

Authorised Dealer for
CHEMICAL INDUSTRIES
(COLOMBO) LTD.
THE MAHARAJA ORGANISATION
LTD.
ST. ANTHONY'S INDUS RIES
GROUP
LANKA CEMENT LTD.

149, Galle Rood,
Tel; 71 - 3314 Dehiwela.

With Best Compliments
from

# Unirex Hardware

No. 15, Abdul Jabbar Mawatha,
Colombo - 12.
Telephone : 35051

# தெய்வ அன்னை

''ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்திவ்வுலகெங்குமாய் நின்றாள்''

என்று அன்னை பராசக்தியின் அபரிமிதமான ஆற்றல் போற்றுகிறது ஒரு தமிழ்ப் பாடல். ஆதியிலிருந்த ஒரே பொருள் அருள் மயமான பரதேவதைதான். அவளிடமிருந்து தான் சராசரங்கள் யாவும் தோன்றின என்று சகல புராணங்களும், சாஸ்திர நூல்களும் பறைபறைகின்றன. மூப்புர சங்காரத்தின் காரணி என்றும் மகா திரிபுர சுந்திரி என்றும் கூறி வணங்குகிறோம். காரண காரியங்களுக்காக எண்ணற்ற வடிவங்களில் தோன்றி அருள் புரிந்திருக்கிறாள். துஷ்டர்களை சிட்சிப்பதற்காக் அவள் ஏந்திய ஆயுதங்களே துஷ்டர்களை ரட்சிக்கும் படைக் கலங்களுமாயின. சிவசக்தியின் பரிவார கணங்களாக பணிபுரிந்து அசுரர் களை அழிக்கப் போர் புரியும் பல சக்திகளாகவும் அவளே அவிர்பவிக்கிறாள். அன்னை என்ற அமிருத சக்தி இவ்வாறு அழிவு சக்தியாக தோன்றுவது அதிசயமாகத் தோன்றுகிறது.

''அன்பு வடிவாகி நிற்பவள், துன்பமெல்லாம் அவள் இழைப்பவள்''

என்று இதையே வேறு ஒரு கவிஞனும் பாடி இருக்கிறார். அன்னை துன்பம் தருவதும் நம் உள்ளக் கோணல்களை நிமிர்த்துவதற்காகவே என்பது தான் இதன் பொருள், அவ்வாறு சிவசக்தி பரிவாரங்களாக போரிடும் தேவியார் வரிசையில் இடம் கொள்பவரே ஸப்த மாதக்கள் என்ற ஏழு அன்னையர். பொதுவாக உலக வழக்கில் பிராம்மி, மாஹேஸ்வரி வாராஹி, வைஷ்ணவி. மாஹேந்திரி அல்லது இந்திராணி, கௌமாரி, சாமுண்டி இவர் களே ஸப்த மாதாக்களாக பூஜிக்கப் படுகின்றனர். ஸப்த மாதாக்களின் சிலா வடிவங்களை யும் பல ஆலயங்களில் காணலாம்.

முன்னமேயே இறைவனை தாய்மை உருவிலே கண்டு தொழுக்கற்ற மனிதன் அறம், பொருள் இன்பத்தின் வடிவுகளாக மலைமகள், அலைமகள், கலைமகளாக எங்கள் எண்ணத்தில் தோன்றியிருக்கிறாள். அப்படி மூவரும் ஓர் உருவாய் தோன்றி நிற்கும் அன்னையே பரா சக்தியாம். எண்ணற்ற திருப்பெயர்களோடு எழில் நிறைந்த எத்தனையோ உருவங்களில் நம் நாட்டில் உள்ள கோயில்களில் எல்லாம் எழுந்தருளி இருக்கிறாள்.

சம பங்க நிலையில் சாந்த சொரூபியாக இருப்பவளேயானாலும், காத்தல் தொழிலுக்கு ஏற்ற கருணை நிறைந்தவளாகவே காட்சி தருகிறாள். அகிலமெல்லாம் எழுந்தருளி இருக்கும் அன்னை பராசக்தியான ஒரு வடிவம் தான் எங்கள் ஸ்ரீ பத்ரகாளி அம்மன், அவளை காணும் போது'' அம்மா தாயே, நீ மூடி வைத்திருக்கும் அமுத கலசத்தை திறந்து, விரைவிலே மக்கள் பசியும், பிணியும் இன்றி வசியும் வளமும் பெற்று வாழ வகை செய்வாய்'' என்று வாய்விட்டு சொல்லவேண்டும் போல் தோன்றும், அவ்வளவு அவளின் சக்தி அவ்வளவு மகத்தானது.

மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும்
நாடரிய பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற் பாரையை வணங்குவோம்

செல்வி B. மகாலெக்ஷ்மி,

Compliments
from

SIRI AGENCY

146/2, FIRST CROSS STREET,
COLOMBO - 11.

TEL: 33274

Compliments
from

P. A. JAYSINGHE
Proprietor

TRANSWORLD COMMUNICATION
CENTRE

No. 19, MAYA AVENUE, P. O. BOX 1083 COLOMBO
SRI LANKA

Cable: JAYATRANS Telephone 588505, 501151
Telex: 22094, 22217 TWO CE Fax No. 94 - 1 500544

Branch: No. 20, Galle Road, Dehiwala
Telephone: 712361, 712367
Telex: 22717 - TWO CE
TELEFAX: No. 94 - 1 - 712267

# எங்கும் நிறைந்த சக்தி!

# எமையாளும் சக்தி!

உலகம் அனைத்தையும் படைத்தும், காத்தும் அழிக்கும் திறம்படைத்த ஒரு சக்தி உண்டு, என்பதை மனிதன் என்று உணர்ந்தானோ அன்றே இவ்வுலகு முழுவதும் சக்தி வழிபாடு தோன்றியது. சக்தியே தான் ஆதியும் அந்தமும் ஆவாள். சக்தி இல்லையேல் முத்தி இல்லை, ஜீவசக்தி இல்லை வாழ்வில்லை. வளமில்லை ஏன் உலக இயக்கம் கூட இல்லை. இறைவனை ஒரு தாயாக ஒரு பெண்ணாக வணங்கி வரும் பெருமை சிந்து நதித் தீரத்தில் தோன்றிய இந்து மதத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

நமது பசிப்பிணி போக்கி தீராத் துன்பங்களைத் தீர்ச் செய்து வாழ்க்கை வளம் பெற கல்வி, செல்வம், வீரம், ஆக்கம், ஊக்கம் போன்ற வல்லமைகளை ஊட்டி சகல ஐசுவரியங்களையும் அருளாசிகளையும் அள்ளிச் சொரிந்து சிவனின் கவசமாக இயங்குபவள் சக்தி. சக்தி இல்லையேல் சிவன் இல்லை. இருவர் சேர்ந்ததே சிவ சக்தி.

சக்தி அன்று அசுரர்களை அழித்த காரணமென்ன அவள் உலக மக்கள் மேல் கொண்டுள்ள தாயன்பே ஆகும். நாம் அறியும் அனைத்து ஜீவராசிகளும் அந்த அன்னை பராசக்தியின் குழந்தைச் செல்வங்களேயாகும். நவராத்திரி தினங்களில் நாம் கொலுவைப்பது பிரபஞ்சப் படைத்தல் தொழில் நடத்த அருள் புரிந்த சக்தி தேவியை நடுவில் வைத்து சக்தியைச் சுற்றி இவ்வுலகப் பொருட்களை வைத்து அதை பூஜிப்பதை குறிக்கும். சகல அண்டங்களையும் படைத்தாளும் சக்தி தேவியை நாம் அகிலாண்டேஸ்வரி என்றும் சர்வலோக நாயகி என்றும் அழைக்கிறோம்.

சக்தி தேவியை வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கிடைத்து அவள் நம் வாழ்வின் இன்னல்களைப் போக்கி துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தந்திடுவாள். இதை அறிந்து நாம் முக்காலமும் நிலைக்கும் அரிய இந்து மதம் கூறும் சக்தி வழிபாட்டைத் தொழுவோம். அன்னை அருளைப் பெறுவோம். ஆகவே நவராத்திரி கொலு அனைத்தையும் படைத்த ஆற்றல் வடிவிலான அன்னைக்கு நாம் செலுத்தும் பௌதீக நன்றியாகும்.

சக்தியை போற்றி சித்தி எய்து!
துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெற்று!
வாழ்வினில் என்றும் வெல்வினை கண்டு!
நாமும் நாடி நாடும் நலம் பெற!
போற்றிடுவோம் போற்றிடுவோம்
போற்றிடுவோம்
"எங்கும் நிறைந்த சக்தியை எமையெல்லாம்
ஆளும் சக்தியை.

திருமதி சாந்தகுமாரி நாஹ.

WITH BEST COMPLIMENTS

FROM

# RAAMJEE FANCY PALACE

Fancy Goods, Eversilver, Oilman Goods & Giftware

361 Galle Road,
Colombo - 4.

---

# BEST WISHES FROM

# COLOMBO GRAM CENTRE

Specialist in: GRAMS Dealers in: Grams & Sweets

70, Sri Kathiresan Street,
Colombo - 13.

# சிந்தனையில் பூத்த
# சிறு மலர்கள்

# உள்ளமும் உடலும்

மயூர இடத்தில் எதிர் கொண்டிருக்கும் அரசமரத்தடியில் அழகான சிறு நுழை வாயிலுடன் கட்டியெழுப்பியிருக்கும் அழகிய ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிக சக்தி வாய்ந்து எழுந்தருளியிருக்கும் சக்தியின் பெருமைகள் எண்ணற்றவை. நாம் எந்த செயலையும் செய்யும் போது நமது புறககண்ணுக்கு தெரியாத ஒரு சக்தி நம்மை வழிப்படுத்துகிறது. ஆம் சகல அண்டங்களையும் படைத்த அந்த அன்னை அகிலாண்டேஸ்வரியின் உன்னத சக்தியேயாகும். பிரம்ம தேவனுக்கு படைத்தல் தொழிலைப் புரிய அருளியவளும் கற்றல் வடிவிலான அந்த அன்னை பராசக்தியேயாகும். தம்மை அண்டியவர் இன்னல்களை புயல்போல் வீறுகொண்டு கனலெனப் பரவிப் போகக்கிவிடுவாள் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை. நல்லதும் தீயதும் செய்திடும் சக்தி அவள்தான். ஆதி பராசக்தி அவளின்றி ஓர் அணுவும் அசையாது. மழையும், காற்றும் கூட அவள் செய்கைதான். இத்தகைய சக்திக்கு இவ்வாறான ஒரு இடத்தில் ஆலயமொன்றும் அமைந்தது இன்றியமையாது செயலாகும்.

நாம் அனைவரும் தனித்தனி மனிதர்களாக பிறந்தது உண்மையல்ல. நாம் அனைவரும் அண்டம் முழுவதையும் உள்ளடக்கிய பரமாத்மாவின் அம்சங்கள் அளவிலா வெளியில் சிதறிப் பரந்துள்ள சக்தியின் அணுத்துளிகள் நம் சுத்த தியானத்தில் உண்மை அறிவுபிறக்கும். அந்த ஞானம் இறைவன் சந்நிதியில் நாம் அனைவரும் சமமாக இருப்பதை உணர்த்தும். அந்த வேறுபாடுகள் அகற்றப்படுகிறது. நாம் கோயிலுக்குப் போகும் முன் சுத்தமாகவே செல்கிறோம். அதுபோல் தியானமே மனச்சுத்தம். சுத்தம் சுகம்தரும். நாம் நெற்றியில் பூசிக் கொள்ளும் திருநீறும், சந்தனமும் நமக்கு குளிர்ச்சியைத் தருகிறது. நாம் பருகும் தீர்த்தம் துளசி போன்ற மருந்து மூலிகைகளினால் ஆனவை. அவை நம் உடல் கிருமிகளை அழிக்கின்றது. ஆகவே கோயிலுக்கு போவதால் எமக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன. யாவரும் ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்திற்கு வருகைதந்து அம்பாளை தினம் தினம் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்று அன்னை அருள் ஏற்று தங்களால் இயன்ற சேவைகளைச் செய்து இவ்வாலயத்தை மென்மேலும் சிறப்பிக்குமாறும், அன்னை உற்சவங்களில் கலந்துகொண்டு இனி தொடர்ந்து வரும் காலங்களின் செயலால் சேவைகளைக்காட்டி மேலும் முன்னேற்றி அன்னை ஸ்ரீ பத்ரகாளி அம்பாளின் பாதம் பணிந்து வாழ்வோமாக.

பகவதி தேவி பார்வதி தேவி
பலரும் போற்று பலமிகு தேவி
அவள்தான் தேவி துர்க்கா தேவி
யோகம் நீ வாணி
சோகம் நிவாரணி
காளிணி நீயே
நீலினி நீயே
நீதினி நீயே
மாதினி நீயே
நீர். நிதி நீயே
மாதவி நீயே
ரோக நிவாரணி
பாப நிவாரணி
யாவரும் போற்றும் தாரணிநீயே.

செல்வி சுஜாதா நாறு

# எமது சமயம்

அன்பே சிவம் என்று கூறுவது எமது சமயம். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி நம் கடவுள். அக்கடவுள் அநாதியானவர் என்பதனால் அவரைப் பற்றி கூறுகின்ற எங்கள் சமயம் அநாதியானது. எங்கள் சமயம் சிவனை முழு முதற் கடவுளாகக் கொள்கின்றது. எனவே அது சைவசமயம் எனப்படும்.

சைவ சமயம் என்பது சிவனை அடையும் வழி எனப் பொருள்படும். இது தமிழராகிய நாம் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் வழி மிகப் பழைமை வாய்ந்த வழி ஆகும்.

நாம் சிவனையும் சக்தியையும் அப்பனாகவும் அம்மையாகவும் வழிபட்டு வருகிறோம். தெய்வம் ஒன்றே என்கிறது எமது சமயம். சைவ மக்கள் தத்தம் பக்குவ நிலைக்கு ஏற்ற வாறு இறைவனை தமது மனக் கண்ணிற் கண்டு வழிபடுகின்றனர்.

சைவ மக்கள் தினமும் கோயில் வழிபாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது கோயிலுக்குப்போதல் நன்று. விசேட தினங்களில் வெள்ளிக்கிழமையும் ஒன்றாகும்.

சைவ மக்கள் கடவுள் பக்தி மார்க்கத்தினாலேயே வழிபடுகிறார்கள். கடவுளிடத்துத் தீவிர அன்புகொண்டு வழிபடுதலே பக்திமார்க்கமாகும். இப்படி வழிபடும்போது ஒவ்வொருவருந் தத்தமக்கு ஏற்ற மாதிரியான தொடர்பைக் கடவுளுடன் கொள்கிறார்கள். சிலர் கடவுளை எசமான் எனக்கொண்டு வணங்குகிறார்கள். வேறு சிலர் அவரைத் தந்தையென சிந்திக்கின்றனர். இன்னுஞ் சிலர் அவருடன் நட்புரிமை பூண்டு ஒழுகுகின்றனர். எவ்வாறு இறைவனை வழிபடினும் இறுதியில் யாவருஞ் சென்றடையும் பரம் பொருள் ஒருவரே.

சைவ மக்கள் பல நோன்புகள் நோற்கின்றனர். நோன்பு நாட்களிலே மனத்தை ஒரு வழிப்படுத்திக் கடவுளை தியானிக்கின்றனர். தீவிரமாக நோன்பைக் கடைப்பிடிப்பவர்கள், பகலும் இரவும் உணவு உட்கொள்ளாதிருந்து அடுத்த நாளே உணவு உட்கொள்ளுவார்கள்.

இறைவனை ஒருவர் எந்த நாம வடிவங்களிலும் வழிபடலாம். இந்துக்கள் தாம் போற்றிய பரம்பொருளைச் சிவனாகவும் சக்தியாகவும், சிவலிங்கமாகவும் எங்கும் நிறைந்த பரம்பொருளாகவும் வழிபட்டு வந்தமை இந்து மதத்திற் பழமை வாய்ந்த ஒரு மரபு என்பதற்குத் தொல்பொருளாராய்ச்சியும் சமய இலக்கியங்களும் பிற இலக்கியங்களும் சான்று பகர்கின்றன.

-சுமதி துரைராஜா-

# சக்தி வழிபாடு

எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் தோழனாகவும் தலைவனாகவும் பக்தி செய்து வழிபடும் மரபு சைவசமயத்தில் உண்டு.

சக்தி என்றால் பலம் என்று பொருள். சிவன் தனது ஐந்தொழில்களையுமே சரிவரச் செய்யும் சக்தியின் துணை அவசியம். அதனால் தான் பெரியவர்கள் ''சக்தியின்றேல் சிவமில்லை'' என்று கூறியிருக்கிறார்கள்.

அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். சூரிய சந்திரனின் ஒளியாகவும், பூவின் மணமாகவும், நீரின் தன்மையாகவும் விளங்குபவள் அவள். மனோபலத்தையும் வாக்கு வன்மையையும் உடல் வலிமையையும் எமக்கு அருளுபவள் அவள். அதனால் மனோகரி என்றும், வாணி என்றும் பெயர் பெறுகிறாள்.

இவ்வுலகம் முழுவதும் ஒரு சக்தியின் ஆற்றலால் இயங்குகின்றது. மேகம் மின்னி இடித்துத் தாரை தாரையாக மழை பொழிகின்றது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மலைகளின் உச்சியிலிருந்து ஆறுகள் வேகமாகப் பாய்ந்தோடி விழுகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமாக ஒரு சக்தி உண்டல்லவா? இறைவனோடு பிரிவின்றி உள்ளதாகிய சக்திதான் அது. அதனையே நாம் தாய்த் தெய்வமாகப் போற்றுகின்றோம்.

சக்திக்கு விழா எடுக்கும் ஒன்பது இரவுகளும் துர்க்கையை மலைமகளாகவும், இலக்குமியை அலைமகளாகவும், சரஸ்வதியை கலைமகளாகவும் துதிக்கின்றனர். இந்த இரவுகளை நவராத்திரி என்பர்.

முதல் மூன்று நாட்களும் வீரத்துக்கு அதிபதி என்று போற்றுகின்றனர். வீரமில்லையேல் மனிதன் கோழையாகி தைரியமற்றவனாக விளங்குவான். துர்க்கையின் கடாட்சம் பெற்றால் வீரமுடையவனாகத் திகழ முடியும். பக்த கோடிகளின் துயரைத்தீர்க்க அருள்புரியும் துர்க்கையை காளி, பத்திரகாளி மாரியம்மாள், நாகபூஷணி போன்ற பல பெயர்கள் கொண்டு அழைப்பார்கள்.

அடுத்த மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமியை கலைமகளாகத் துதிக்கின்றனர் செல்வமில்லையேல் நேர்மையுடன் தன்னம்பிக்கையும் உழைத்தால் அவள் செல்வத்தைப்பெற இலக்குமி கடாட்சம் கிடைக்கும். அழகாக இலட்சுமிகரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் இலக்குமியை திருமகள் என்றும் அழைக்கின்றனர்.

இறுதி மூன்று நாட்களும் கல்வியைத்தரும் சரஸ்வதியை [அலைமகளாகத் துதிக்கின்றனர். செல்வங்களில் அழியாச் செல்வம் கல்வியாகும். வெள்ளைத் தாமரையில் வெள்ளை உடையுடுத்திக் காட்சியளிக்கும் சரஸ்வதி தேவி மனிதர்களுக்கும் கல்வியை வழங்குகிறாள். எனவே தான் எம்போன்ற மாணவிகளுக்கு உகந்த தெய்வம் சரஸ்வதி தேவியார்.

நவராத்திரியை அடுத்த நாள் விஜயதசமி கொண்டாடப்படுகிறது. விஜய
நாட்களில் ஏடுதொடக்கல் இடம்பெறும். இத்தினங்கள் சக்தி வழிபாட்டுத்
தினங்கள் ஆகும். சக்தி வழிபாட்டின் மூலம் எமக்குத் தேவையான வீரம், (
ஆகிய மூன்றையும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வோமாக!

று

வாழ்க.

# தேவியர் மூவர்

இப் பூவுலகில் மனிதனாய்ப் பிறந்த நாம் மனிதமான வாழ்வை வாழ வேண்டுமாயின் தேவியர் மூவரின் அருளையும் ஆசியையும் பெறுவது அவசியம். ஆம் கல்வி செல்வம் வீரம் இவை மூன்றுமே மனித வாழ்க்கையின் உயிரோட்டமாகும். கல்வி இல்லாதவனை மூடனாயும், செல்வமில்லாதவனை அந்தஸ்தற்றவனாகவும், வீரமில்லாதவனை கோழையாகவும் இச்சமுதாயம் கணிக்கின்றது. ஆகவே அன்னை பராசக்தியின் அடிகளை பணிந்து போற்றி பூஜித்து வழிபடுவோம். இவர்களை முறையே வழிபடும் தினமே நவராத்திரி எனப்படும்.

முதல் மூன்று நாட்களும் தளர்வடையா வீரத்தை தருபவளாகிய மலைமகளாம் துர்கா தேவியை வணங்குவோம். அடுத்த மூன்று நாட்களும் சீரும் சிறப்பும் குறையாத செல்வத்தையும் வழங்குபவளாகிய அலைமகளாம் இலக்குமி தேவியை வணங்குவோம். இறுதி மூன்று நாட்களும் அழியாச் செல்வமாகிய ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அள்ளித் தருபவளாகிய கலைமகளாம் சரஸ்வதி தேவியை வணங்குவோம்.

ஒன்பது தினங்களையும் அடுத்து வரும் பத்தாம் நாள் விஜயதசமி ஆகும். அன்று தான் சிறுவர் சிறுமியருக்கு கற்களும், முட்களும் நிறைந்த வாழ்க்கை என்னும் வீதியை வெற்றிகரமாக கடப்பதற்கு 'கல்வி'' என்னும் அத்திவாரம் இடப்படுகின்றது.

''கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்'' என்பது நமது முன்னோரின் பொன் மொழியாகும். ஆனால் எம்மை காக்கும் பொருட்டே அரசமரத்தின் அடியில் அமைதியுடன் ஆட்சியை புரிகின்றாள் அன்னை அவள். ''இக்கட்டுக்கள் பல வந்த போதிலும் என்னை நீ நினைத்திரு'' என்று குறிப்பால் கூறிக் கொண்டிருக்கின்றாள் அன்னை ஆதிபராசக்தி. ஆகவே அன்னையை வணங்கி ஆசிகள் பல பெற்று நாமனைவரும் உய்வோமாக.

அரசமரத்தை ஆசனமாய் ஆக்கிக் கொண்டாய்
அடியவரை அன்புடனே அணைத்து கொண்டாய்,

**திருமதி இராஜேஸ்வரி மோகனதாஸ்**

# ஸ்ரீ பத்திரகாளியின் சிங்காரப்பணிக்குழு

வித்தகியாள் ஸ்ரீ பத்திரகாளி அம்மன்
வெள்ளரசும், வேம்பும் இலை மயூரு பதி
உத்தமியாய் கொலுவிருந்து உலகு தொழ
நித்தம், நித்தம் அருள் புரிந்தாள் அன்னையர்க்கு
விததகமாய் விளங்குகின்ற புதியதொரு ஆலயத்தை
அன்புடனே திருப்பணியார் ஆர்வமுடன் எழுப்பினரே
அன்னவர் தம் அரும்பணிக்கோர் அழகு மொழி கவிதையிது
எம் தொகுதி நாடாளுமன்ற நம் பிரதிநிதியான
அநுரா டஸ்த்தியனும் அல்பனோடும் அன்னை தாசர்
வளமான மனமுடையார் வல்லிபுரம் பெருந்தகையார்
காப்பாளர் இருவர் வந்தார் கண்ணியமாய் தலைமை தாங்கி
எப்போதும் அரும்பணியை இனிதாகச் செய்வதற்கு
தப்பாத தலைவர் சுப்பிரமணியம் வழி காட்டி
எப்போதும் அவருடனே இணைந்த சேவை உப-தலைவர்
புருஷோத்தமரோடு அரும்பணியின் செயலாளர்
நம்பி அலன் சுரேஸ் எல்பான் நல்லதொரு நிதியாளர்
கீர்த்தி மிகு கிருஷ்ணன் உடன் துணையான செயல் புரிய
முருகையா சேவையாளன் நிதி உதவி பொருளாளர்
மோகன்தான் கொண்டதொரு முத்தான குழு அமைப்பு
உயிரிருக்கும் வரை நாங்கள் அன்னை காளி தேவியர்க்கு
உளமார பணி புரிந்து உற்ற குறை அனைத்தும் நீக்கி
நலமான வாழ்வடைவோம் என்று நம்பி உழைக்கின்ற
வலுவான குழுவினரை வாஞ்சை உடன் தருகின்றோம்
பிரதாபன், சண்முகநாதன், யோகேந்திரன், ரகுபதியும்
பாலசுப்பிரமணியம், விஜயேந்திரன், அசோகனோடு
அசோக்குமார், சந்திரசேனு, சகாதேவன், சிவப்பிரகாசம்
பத்துடன் ஒன்று சேர்ந்த பாங்கான கூட்டமுடன்
சித்தம் ஒன்றாகி சிறப்புடனே சேவை செய்து
நித்தம் நாம் அன்னை பணி நிறையவே நாம் புரிந்து
பல்லாண்டு நலம் சுரக்க பண்புடனே வாழ்வோம் என்று
வல்லவள் காளி பாதம் வணங்குவோம் வாழ்க. வாழ்க.

# BEST WISHES

# FROM

# RAM BROS.

140 MAIN STREET

COLOMBO - 11.

T'phone : 20127, 547698

# நல்லார் யாவருக்கும்
# நமது இதய பூர்வமான
# இன்பம் கனிந்த நன்றிகள்

''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு''
— திருவள்ளுவர்

செம்முளரி மலர் பாத ஸ்ரீ பத்திரகாளியர்க்கு
உம்முடனே நடந்த திரு குட முழுக்கு நினைவாக
இம் மலரை சமர்ப்பிக்கும் இனிதான வேளையிலே
அம்மையவள் அரும் பணியார் அனைவருக்கும் அன்புடனே
அரிய நன்றி கடப்பாடு கூறுவதே மரபுமாகும்
பாங்குடனே நாம் உரைக்கும் நன்றி மலர் வார்த்தைகளை
அன்புடனே ஏற்றிடுவீர் ஆவ பிழை பொறுத்திடுவீர்.

1. திருக்குட முழுக்குக்கான திருப்பணியில் ஈடுபட்டு
அரிய பொருள் உதவிகளும் ஆக்கமான செயல் முறையும்
குறைவின்றி நடத்தி வைத்த குன்றாத மனமுடையார்
வல்லிபுரம் ஐயா வாழ்க வாஞ்சையுடன் நன்றி.

2. ஆக்கமுடன் அரசியலில் ஆனதுணை புரிந்த
அநுரா பஸ்த்தியராம் அவர்க்கும் நம் நன்றி உண்டு.

3. ஆலயத்தை அழகு மிகும் கலைக்கோட்டமாக்கித் தந்த
ஸ்தபதி மகேஸ்வரர்க்கும், இனிதான அவர் குழுக்கும்
விரிவான நன்றி விழைந்தன்பாய் ஏற்றிடுக

4; அள்ளி, அள்ளி நிதி உதவி அடுத்தடுத்து தான் புரிந்த
வள்ளல் மன மனமுடையார் வாழ்க அவர்க்கும் நன்றி.

நம் அன்னை கும்பாபிஷேகத்தை
நன்னையமாய் செய்த சாமி விஸ்வநாத ஐயாவுக்கும்
நலமுடனே அவர்க்குத்துணை புரிந்த குருமார்களுக்கும்
நாம் வணங்கி நன்றி சொல்வோம் நயமாக ஏற்றிடுக.

என் நாளும் எம் பணிக்கு இணைந்து நன்கு உதவி செய்த
பொன் மன பொது மக்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.
சிறப்பு மலர் தான் மலர, ஆசிரியப் பணிபுரிந்த
சீருடப்பு சோமாஸ்கந்தர் அதிபருக்கு எங்கள் நன்றி.

மலர் குழுவில் நின்று மனம் நிறைந்து பணி புரிந்த
மலர் குழு அன்பர்கள் அனைவர்க்கும் எம் நன்றி.
சொல்லாலும், பொருளாலும், செயலாலும் உதவி செய்த
எத்தனையோ அடியவர்கள் அத்தனையோர்க்கு நன்றி.

யாவுக்கும் அவளே துணையவள் ஆதலினால்
அன்னை திருபாதம் அதை நாம் வணங்கி
ஆயிரம் ஆயிரம் கோடி நன்றி
மங்களம், மங்களம், மங்களம்

சர்வம் சக்தி மயம்

பரிபாலனசபை

*with best compliments*

*from*

# A. A. K. Nawaz Clearing Agent

( Prop : **A. A. K. NAWAZ** )

Customs House Agent, Clearing, Forwarding Transport
and
Commission Agent, Importer's Exporter's Representative,


Office :
**" DARULSALAM "**
742 / 4, Negombo Road,
Mabola.

# மயூரா பதியமர் மாதேவி


வெள்ளரசும் வேம்புமிணை வித்தகியாய்ச் சூலமதின்
தெள்ளுதமிழ் மாந்தருக்குத் காளியாகி — உள்ளமிலாத்
தாயன்பால் எந்தநாளும் தான்சனிந்து காக்க வந்தாள்
மயூரா பதியமர்மா தேவி

யாது மாகி நின்றாய் — காளி
யாவு மாகி நின்றாய்
தீது யாவும் நீக்க மயூரா
பதி எழுந்து வந்தாய்.

— ஆசிரியர்




பிள்ளையார் சந்நிதி




ஸ்ரீ பத்ரகாளியின் சிங்காரக் கருவறை



திருப்பணியே சிவப்பணியாக நிற்கும் இன்றைய செயற்குழு



உற்சவ தேவியின் ஒய்யாரக் கொலுமண்டபம்



பாலமுருகன் சந்நிதி

## — பாமாலை —

### எடுப்பு

குற்றம் பொறுத் தருளம்மா — உன்னை நிதம்
கும்பிடு கின்றேன் அம்மா — அம்மா குற்றம்

### தொடுப்பு

கற்றைச் சடைவிரித்து ககனவழி நிறைந்து
காணும் பொருளெல்லாம் காட்சி தரும் மாயே குற்றம்

கஞ்சிக் குளிர்ச்சி வைத்தும் கண் பார்வை வேண்டி நின்றோம்
நெஞ்சக் கோவிலிலே நினைந்தே பாடுகின்றோம்
தஞ்சம் என்றே நம்பியுன் பிள்ளைகள் நாம் வந்தோம்
தாயே காளியம்மா தயவுடன் காரம்மா குற்றம்

கவி காளி தாசனுக்கு கவி மழை தந்தவளே
அபிராமிப் பட்டருக்கு அற்புதம் செய்தவளே
தவம் செய்ய மயூரபதி அரசினில்
பவம் போக்க வேம்பினிலே வந்தவளே
பாங்காய் அமர்ந்தவளே குற்றம்

கண்ணன்
உடப்பூரான்

# ஓம்

# சக்தி

# மங்களம்

ஆலய பரிபாலன சபை

*With Best Wishes*

*from*

# Hotel Lanka Orchard Ltd.

No. 7, GALLE ROAD,
COLOMBO - 6.
Tel : 580809 - 589352

TELEX :- 21570
ZAMNAZ

*With Best Compliments*

*from*

# Prince Garments
# &
# Umbrella Manufacturers Ltd.
# &
# F N F Brothers Pvt. Ltd.

368, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO - 12.
Tel :- **548648 - 545831**

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
14875

KUMARAN PRESS DAM STREET COLOMBO 12